உ
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

நச்சினார்க்கினியன்

திரிசிரபுரத்தினின்று வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"பச்சைமால் அனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சில்,நாற் றிசையும் உண்ணும்; அமிர்தென, எழுநா எச்சில்
மெச்சினார் ஞாலம் விண்ணோர் மிசைகுவர்; வேத போதன்
'நச்சினார்க் கினியன்' எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்"

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—தமிழ் மறை

தொகுதி 2. } அக்ஷய-ஆண்டு வைகாசி-மீ
1926-ஆண்டு மே-மீ { பகுதி 5.

தெய்வ வணக்கம்.

அங்கிங் கெனாதபடி எங்கும்ப்ர காசமாய்
ஆனந்த பூர்த்தி ஆகி
அருளொடு நிறைந்ததெது? தன் அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடிஎல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது? சமயகோ டிகள்எலாம்
தந்தெய்வம் எந்தெய்வம் என்(று)
எங்கும் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது?
எங்கணும் பெருவழக்காம்
யாதினும் வல்லவொரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளதெது?மேல்
கங்குல்பகல் அறநின்ற எல்லையுள தெது? அது
கருத்திற் கிசைந்த(து); அதுவே
கண்டன எலாம்மோன உருவெளிய தாகவும்
கருதிஅஞ் சலிசெய்குவாம்.

— தாயுமானவர்.

மகாபாரதம்.

(101-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

இவர் நல்ல விஷ்ணுபக்தராயினும் சிவத்வேஷமில்லாதவரென்பது இவர் தம் பாரதத்தில் சிவபிரானைப்பற்றி வருமிடந்தோறும், உள்ளவாறே உயர்த்திக்கூறியிருத்தலைக் கொண்டறியலாகும். உதாரணமாக, அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை சருக்கத்தில், அவன், சிவஸ்தலங்களாகிய கச்சி, அருணை, சிதம்பரம், மதுரை முதலிய ஸ்தலங்களைத் தரிசித்த விதத்தைப்பற்றிக் கூறும் 13, 14, 15, 18, 20, 21 ஆவது செய்யுட்களையும், அர்ச்சுனன் தவநிலைச்சருக்கத்தில், அவன் வேடவேடம் பூண்ட பரமசிவனை வில்லால் அடித்த செய்தி கூறும் 106, 107 ஆவது செய்யுட்களையும், பதின்மூன்றும் போர்ச் சருக்கத்தில் காணப்படும் "புரநகையாலெரி" என்று தொடங்கும் செய்யுள் முதல் சில செய்யுட்களையும் உற்று நோக்குவார்க்கு இவ்வுண்மை புலப்படும்.

"விண்ணிலுறை வானவரில்" எனத் தொடங்கும் 106 ஆவது செய்யுளில், "விரிஞ்சன் அரியே முதலியோர்" என்பதை நன்கு கவனிப்பின், சிவபிரான், வந்தியின் கூலியாளாய் வந்து பாண்டியனல் பிரம்படிபட்டதைக் கூறிய பரம சிவபக்தராகிய பரஞ்சோதியார் கூற்றினும், பரம விஷ்ணு பக்தராகிய வில்லிபுத்தூரார் கூற்று, ஆற்றல் மிக்க தென்பது நன்கு புலப்படும். ஏனெனில், பரஞ்சோதியார் தமது திருவிளையாடற் புராணத்தில், உபசாரமாக, 'தண்ணென மாயோன் விழித்தனன்; கமலச் சோதியும் யாதென விழித்தான்' என்று இவ்வளவே கூறியுள்ளனர். வில்லி கூறிய இரண்டு செய்யுட்களையும் மீண்டும் மீண்டும் படித்து, நாம் கூறிய உண்மையை ஞாபகத்திருத்துக. இம்மட்டோ? பரமசிவனும் அர்ச்சுனனும் மல்யுத்தம் செய்ததை வாணிக்கப் புகுந்த வில்லிபுத்தூரார், "உள்ளபடி விரற்றலைகள்" என்ற தொடக்கத்து 100-ஆவது செய்யுளில் "வள்ளல் எனையாளுடைய மாதவனும் மாதவனும் மல்லமர் தொடங்கியுறவே" என்று கூறியிருப்பதை நோக்குங்கள். "வள்ளல் எனையாளுடைய மாதவன்" என்ற இத்தொடரே இவர் சிவத்வேஷ மில்லாதவர் எனபதைக் குறிப்பதோடு, சிவநேசம் மிக்குடையவர் என்பதையும் குறிக்கு மன்றோ?

இவருடைய ஆழ்வார் பக்தியும், அவர்கள் திருமொழிகளை இவர் போற்றுந் தன்மையும், சூதுபோர்ச்சருக்கத்தில் 5-ஆவது செய்யுளின் கடைசி இரண்டு வரியிலும் பதினொன்காம் போர்ச்சருக்கம் முதற் செய்யுளின் கடைசி வரியிலும் இவர் தொண்டரடிப்பொடி ஆழ்வார் கருத்தைக் குறித்துள்ளதைக் கொண்டும்; பதினைந்தாம் போர்ச்

சருக்கக் காப்புச் செய்யுளிலும், பத்தாம் போர்ச்சருக்கக் காப்புச் செய்யுளிலும் முறையே நம்மாழ்வாரையும் திருமங்கையாழ்வாரையும் கூறியதைக் கொண்டும் அறிந்துணரலாம்.

இனி வில்லிபுத்தூராரைப்பற்றிக் கர்ணபரம்பரையாக வழங்கி வரும் வரலாறு இங்குச் சுருக்கி உரைக்கப்படும்:

"பெண்ணை வளந்திகழும் திருமுனைப்பாடி நாட்டில், வீரராகவாசாரியாருக்குப் புதல்வராய்த் தோன்றிய இவருக்குப் பெற்றோர்கள், தாம் மறந்தும் புறந்தொழா வைணவராதலால், ஆழ்வார்களுள் "விண்டு சித்தர்" என்று பெயர் சிறந்த "வில்லிபுத்தூராழ்வார்' என்ற அருட் செல்வரின் திருப்பெயரையே இயற்பெயராக வைத்தனர். இவர் தம் தந்தையர்பால் தென்மொழி, வடமொழி இரண்டிலுமுள்ள நூற்களைப் பயின்று, ஐங் கவிகளையும் பாடவல்ல நற்கவிராசராய், மூவரசர் பாலும் பரிசு பெற்று, இந்நிலத்தில், ஒரு பெரும் புலவராய்த் திகழ்ந்த காலை, அக்காலத்துச் சிலர், தமிழ் மொழியை வரலாற்று முறையாற் பயிலாது சிறிது கற்றதனையானே செருக்கித் திரிவதைக் கண்டு பொறாராய், அவர் தருக்கொழிப்பான், அவர்கள்பால் வாதம் புரிந்து, வெல்வதென நியமம் பூண்டு, தோற்போர் செவியைத் துறடு கொண்டு தோண்டி யறுப்பதென வெளிப்படுத்திப் பலரை வென்று வரும் நாளில், திருக்காஞ்சி நகரத்திற்குச் சென்றார். அங்கு, அனந்த பட்டர் என்னும் ஒரு புலவரை வாதுக்கழைத்துச் சொற்போரில் அவரை வென்றாராக, அவர் செவியினை அறுப்பதற்கு, துறட்டியைப் பற்றியபோது அப்புலவர் சமத்காரமாக "அநந்தனுக்குச் செவி இல்லை என்பதை நீவிர் நூற்பயிற்சியால் அறிந்திலிர் போலும்" என்று கூற, அவர் திறம்பெறக் கூறியதைக் கேட்டு மகிழ்ந்து, அவர் செவியினை அவருக்குப் பரிசாக அளித்துத் திருவண்ணாமலைக் கேகினர். அக்காலை, அந்த நகரிலிருந்த புலவர் பலரும் இவர் வருகையை அறிந்து அஞ்சி, அப்போது முருகப்பெருமான் திருவருட் செல்வராய்த் திருப்புகழ் பாடி அருளிய அருணகிரிநாதர் என்ற பெரியோர்பால் இச்செய்தியினை விண்ணப்பம் செய்து நின்றனர். அவரும் இதை அறிந்து வியந்து நின்றனர். பின்பு வில்லிபுத்தூரார் அவ் அருணகிரிநாதரோடு வாதஞ் செய்யச் சென்று, அவர் இணங்கியவாறே, பெரியோர்கள் பலர் கூடிய பேரவையில், அருணகிரியார் அப்போது புதிதாகப் பாடிய 'கந்தரந்தாதி' என்னும் யமக அந்தாதிச் செய்யுட்களுக்கு உடன் உடன் பொருள் கூறுவதாகத் துணிந்து அங்ஙனமே கூறிவருங்கால், 53-ஆம் பாடலாகிய 'திதத்தத் தத்தித்தத் திதாதை' யென்று தொடங்கி ஒரு மெய்யால் வந்த யமகப் பாட்டிற்குப் பொருள் கூற வறியாது தியங்கினர். இவ்வாறு தோல்வியுற்ற வில்லிபுத்தூரார்க்கு அருள் வள்ளலாகிய

அருணகிரியார், கல்விச் செருக்கு ஒழியுமாறு அருண்மொழி கூறி விடுக்க, இவர் தம்மூர் சென்றிருந்தார்."

இவ்வாலாறு மெய்ம்மையானதெனக் கோடற்பாலதே: ஏனெனின், இவ் வருணகிரிநாதர்பால் வாதஞ்செய்த சம்பந்தாண்டான் என்னும் வாதி 'இரட்டையாற் பாடப்பட்டவன் என்பது, தமிழ் நாவலர் சரிதையாற் பெறப்படுதலானும், இவ்விரட்டையர்கள் காலத்தவராகிய காளமேகப் புலவரும் இக் காளமேகப் புலவர் பாடிய திருமலைராயன் என்னும் அரசனும், அருணகிரிநாதர் காலத்தவனாகிய பிரபுடதேவராயன் என்னும் அரசனும், ஒரு காலத்தவராதல்,சாஸன வராச்சியால் துணியப்படுகின்றமையானும், 'வில்லி புத்தூரார் துறடு கொண்டு செவியறுக்கும் வழக்க முடையரென்பது

"குட்டுதற்குப் பிள்ளைப்பாண் டியனுர் இல்லை
குறும்பி யள வாக்காதைக் குறித்துத் தோண்டி
எட்டினா வறுப்பதற்கு வில்லி யில்லை.

என்று வரும் தமிழ் நாவலர் சரிதைப் பாடலால் பெறப்படுதலானும், என்பது. இப்புலவர்களும் இவ்வரசர்களும் ஒரு காலத்தினர் என்பதற்குரிய சான்றுகளை விரித்துரைக்க இஃ திடமின்மையின் சுருங்க உரைத்தாம்.

இவ்வாசிரியர் இந்நூலைப்பாடுங்கால் வட நூலுக்கு இணங்கப் பாடினராயினும், இதற்குரிய 18 பர்வங்களையும் முற்றப் பாடிற்றிலர். இவர் பாடியன முதற் பத்துப் பருவங்களே. இவர் நூலுக்கு உரிய செய்யுட்கள் 4350க்கு மேற்சில. இனி,

" கலிதனில் வியாசன் சொன்ன கணபதி எழுது பாடல்
பொலிவுறு தமிழி லாறு யிரமென விருத்தம் போற்றிச்
சலிவறு வில்லி புத்தூர் இறைவனுஞ் சார்வ பௌமன்
ஒலியெழு மறையோர் கோமான் உயர்ந்தவர் உவப்பச்சொன்னுன்"

என்னும் பாடல் ஒன்றினைக் கொண்டு 6000 என்பர். அவை வழக்கில் இல்லை. இவர் பாரதம் பாடியதற்கும் பிற பகுதிகள் இன்மைக்கும் பலர் பலகாரணம் கூறுகின்றனர். அவற்றை ஈண்டுச் சுருக்கிக் கூறுவோம்:—

1. அருணகிரிநாதருடன் வாதம் புரியுங்கால், அவர் சைவ சமயி ஆதலால் அவரைப் பார்க்கக்கூடாதெனக் கருதி இடையே திரையிட்டிருந்து வாதிக்க, அவர் சபித்தலாற் கண்ணிழந்து அது நிவிர்த்தியாக இதனைப் பாடினர் என்பர் சிலர்.

2. இவர் வடநாட்டு யாத்திரை செய்து திரும்புங்கால் வழியில் திருக்காளத்தித் திருமலையைக் காணும் அது சிவபிரான் திருமலையாதலால் அதனைப் பார்க்க விருப்பமில்லாராய்த் தம் குடையால் மறைத்துக்கொள்ள, அதனுற் கண்ணிழந்து

வருந்த அப்போது அப்பாவம் தீர அருணகிரி நாதர் சொற்படி சிவோத்கருஷ்மாக இந்நூலைப் பாடினர் என்பர் ஒருசாரார்.

3. இவர் தம் உடன் பிறந்தார்க்குத் தாய பாகம் கொடாது கடிந்து வெருட்ட அவர் இதனைத் தம் அரசன்பாற்கூற, இவர் பிடிவாதமுடையவர் என்பதை அறிந்த அரசன், இவரை யழைத்துப் பாரதத்தைமொழி பெயர்த்துப் பாடும்படி கூற, அங்ஙனம் பாடி அரங்கேற்றுங் காலையில், 'கிருட்டிணன் தூது' சருக்கத்தில், துரியோதனன் தாயபாகம் கொடேனென மறுக்குஞ் சந்தர்ப்பத்தைப் பிரசங்கிக்கும்போது, இவர் தம்பியார் வந்து, "எனக்குச் சேரவேண்டிய பாகத்தை இவரும் கொடுத்திலர் ; இங்கு கூறிய துரியோதனனுக்கும் இவருக்கும் வேறு பாடென்னை ?" என்று கூறினாராக, அதனைக்கேட்டு வருந்திப் பின்னர் தாயபாகத்தைக் கொடுத்தனர் என்பர் வேறு சிலர். இவர் கடமையை வற்புறுத்த அரசன் செய்த சூழ்ச்சி இஃது என்பர்.

4. இவர் முற்கூறிய அரசனிடத்திற் பெரும்பொருளைக் கடனாகப் பெற்றுப் பின்னர்க் கொடுக்கவியலாது மயங்க, அரசன் பாரதத்தை மொழி பெயர்க்குமாறு கூறிச் செய்யுள் ஒன்றுக்கு இத்தனை பணம் விழுக்காடு தள்ளிக் கொள்வதாகச் சொல்ல, அதனைத் தீர்ப்பதற்கு இதனைப் பாடினரென்றும், அங்ஙனம் கடனுக்குச் செய்யுளை ஈடு செய்யக் கணக்குப் பார்த்தபோது, 13ஆம் போர் சருக்கத்து வரும், 'பரிசன குமாரன் விடு, மெரிகணைகளான் முடுகு' முதலிய சிறு பாடல்களுக்கும் அந்த விழுக்காடு தள்ள அரசன் மறுத்தனனென்றும், அப்போது நூலாசிரியர் சினந்து எவ்வகையிற் கணக்கிடினும் கடன்தொகைக்குச் செய்யுள் ஈடுபத்துப் பருவத்திற்கு மேல் செல்லாதெனக் கூறி, அதன்படியே முடிய எஞ்சிய எட்டுப் பருவச் செய்யுட்களைக் கிழித்தொழித்தனரென்றும் கூறுவர் மற்றையார். இவற்றிற் சில வேறுபட உரைத்தலுமுண்டு

5. இனி இவர் எட்டுப் பருவங்களைப் பாடாது விடுத்தமைக்குப் பிறிது காரணம் கூறுவர் சிலர்: 'முழுப் பாரதமும் முடியுமுன் அவர் காலம் சென்றிருக்கலாம்' என்பது ஒரு காரணம். நூல் முழுமையும் பாடின், நல்லோராகிய பாண்டவர்கள் கிருஷ்ணபகவான் ஆகிய மகா புருஷர்களின மரண சரித்திரம் கூறவேண்டி வருமென அஞ்சி அங்ஙனம் செய்யாதொழிந்தனர் என்பது மற்றொரு காரணம். சிலர் வில்லிபுத்தூரார் குமராகிய வரந்தருவார் மீதி எட்டுப் பருவங்களையும் தம் தந்தையார் அனுமதி பெற்றுப் பாடி முடித்ததாலேயே வில்லிபுத்தூரார் தம் பாரதத்தை "கனைகடற்பாரளித்தவருமங்கரின் அறநெறியே கருதி வாழ்ந்தார்" என்று மங்களகரமாக முடித்தனர் என்பர். வரந்தருவார் எழுதியதாகக் கூறப்படும் பாரதப் பகுதி நாளது வரை யாண்டும் கிடைத்திலது. (இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

கற்புடைப் பெண்டிர் கடுமொழி பலித்தமை.

"காம விகாரத்தால் மயங்கிப் பத்தினிப் பெண்டிரை அடுத்து, வன்மை செய்தோ, செய்ய முயன்றோ, குலக்கேடு தேடியோர் பலருண்டு". இவ்வுண்மையை நன்கு விளக்க உண்மையிலேயே நடந்த ஒரு விஷயத்தைப் புகல்வோம். சிற்சில காரணம்பற்றிப் பெயர்களை மட்டும் மாற்றிக் கூறுகிறோம். அவ்விஷயம் வருமாறு:—

சுமார் பத்துப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன், நாகப்பட்டினம் தாலூகாவிலே, மாசிலாமணி என்ற பிரபு ஒருவர் இருந்தார். அவர் வணிக குலத்தைச் சார்ந்தவர். அவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருந்தன. இவர்களை அவரும் அவர் மனைவியும் கண்ணை இமை காப்பதுபோன்று காத்துவந்தனர். தன் குழந்தைகள் மீது, மனைவி கொண்ட அன்பிலும் பேரன்புடைய மாசிலாமணி, 'திரைகடலோடியும் திரவியந் தேடி'யவர். லோபகுணரான சில தனவந்தர்களைப்போல் இல்லாமல், அவர், தாம் வருந்திச் சம்பாதித்த பணத்தை அறிஞருக்கும் வறிஞருக்கும் கிளைஞருக்கும் கொடுத்தே உண்பர். உணவின்றிப் பிறர் வருந்துவதைக் காணவும் சகியார். எம்மதத்தவரையும் கைவிடாது உபசரித்து அனுப்புவார். இத்தகைய எல்லா நற்குணமும் வாய்ந்த இப்பிரபுவுக்கு ஒரு பெருங்குறையுண்டு. இக்குறை அவருக்கு அற்பமாகத்தோன்றினும் அது நல்லோரால் பெரும் பிழையெனவே மதிக்கத்தக்கது.

'திருவினும் நல்லாள் மனைக்கிழத்தியேனும், பிறர்மனைக்கே பீடழிந்து நிற்கும்' பித்து இவருக்குண்டு. தம் எண்ணம் நிறைவேறும்வரை எவரையும் பல்வேறு விதங்களில் இம்சிக்கவும் முயல்வர். அவருடைய நண்பர்கள் என்னசொல்லியும் பயன்படாமற் போயிற்று.

ஒருநாள் மாலை, அவர், ஆற்றோரம் உலாவச் செல்லுகையில், வழியில் தன்னந்தனியளாய் நின்ற ஒரு இளமடந்தையைக் கண்ணுற்று அவளை ரகஸ்யமாய் 'நீ வா' என்றார். உடனே அவள் அஞ்சி, அவ்விடத்திலிருந்து ஓடலாயினள். காமத்தீயாற் சூடுண்ட மாசிலாமணி அவளைத்தொடர்ந்தார். 'தீக்கட் புலி தொடரச் செல்லும் சிறுமான்போல்' சென்ற அவள், எவ்வளவுதூரம் ஓடமுடியும்? மேற்செல்லாது ஓரிடத்திலிருந்து, மனம் பதை பதைக்க ஆத்திரம் பொங்க, அவரை நோக்கி, "ஐய உன்புத்தி போனபோக்கென்னே! நீயும் இரு பெண்மகவு பெற்றவன் தானே? என்விஷயமாய் நீ செய்யத் துணிந்துள்ள அடாத செய்கை உன்மக்களை இதினினும் கொடும் பழிக்குள்ளாக்கிவிடாதா?" என்று வருந்திக் கூறினள்.

மாசிலாமணி இயற்கையில் நற்குணமுடையவராதலாலும், தம் மக்களிடம் பேரன்புவாய்ந்தவராதலாலும், அவ்வுத்தமியின் வார்த்தை ஒவ்வொன்றும் அம்புபோல் அவர்மனத்தைத் தைத்தது. தாம் வருந்

தினும் தம் மக்கள் வருந்துவதைக் காணச்சகியா அவர், அந்நிமிஷமே அவளை மேலேதும் செய்யாமல் விடுத்து, அவள்பாற் பொறுதிவேண்டி வீடடைந்து தம் மனைவியிடம் நடந்தவற்றைக் கூறினர்.

"ஆ! ஆ!! என்னகாரியம் செய்தீர்? உம்மால் நம் மக்களுக்கும் கேடு வந்துற்றதே!" என்று துடிதுடித்து அவள் உடனே தன்நாயகன் மானபங்கம் செய்ய எண்ணிய பார்ப்பனச் சிறுமியைத்தேடிப் பிடித்து 'உயர்குலம்போல் உயர் குணமும் உயர் நடையும் ஒருங்குற்ற' அவள் காலில் விழுந்து, "கற்புடை மங்காய்! என் நாயகனை மன்னித்து என் குழந்தைகளை அருளுதி. என் கண்ணெதிரேயே என்குழந்தைகள் துர்க்கதி அடைவதைக்காண என்மனம் சகிக்குமோ?" என்று பல கூறிப் பிரலாபித்தாள். சிறுமி, மனமிரங்கி, "தாயே! விதைத்தவன் அறுத்தே தீரவேண்டும். என்னை உன் நாயகன் துராகிருதம் செய்யத் துணிந்தாராகையால் உன்மக்கட் கேதேனும் நேருமே என்ற பயம் எனக்குண்டாயிற்று. அது என் விருப்பன்று. காரண காரிய விளைவின் உண்மை இது. பிழை நான் பொறுத்தேன்: ஈசுவரசங்கற்பம் எப்படியாமோ? வருந்தேல்." என்று அவளைத் தேற்றி அனுப்பினள்.

சிறுமியின் பழைய வாக்குப் பலிக்கும் காலம் வந்தது, மாசிலாமணியின் இரு குமாரத்திகளும் பருவ மங்கையராயினர். மூத்த குமாரத்தி கார்வண்ணிக்குத் தக்கபுருஷன் ஒருவனைத்தேடி விவாகம் செய்வித்தார்கள். அவள் கணவனான சுப்பரத்தினம், மாமனாரைப் போலவே பிரபல வியாபாரி ஆனதால் பொருள் தேடச் சிங்கப்பூர் சென்று அங்கேயே ஐந்தாறு வருஷம் தங்கிவிட்டார். பாவம்! கார்வண்ணி தன் கணவன் பிரிவாற்றாமைக்கு வருந்தலாயினள். அவள் எழுதப்படிக்க அறியாதவளாதலின், தன் நிலைமையைப் பர்த்தாவுக்குக் கடிதம் மூலம் அறிவிக்க அவளாற் இயலாமற்போயிற்று. ஆயினும் அவள் சும்மா இருக்கவில்லை. தன் மாமிக்கு சுகக்குறைவாய்ச் இருப்பதாயும் ஆதலின், அவள் அவரைப்பார்க்க பிரியப்படுவதாயும் உடனே ஊருக்கு வரும்படியாயும், ஒரு சிறுவனைக்கொண்டு எழுதுவித்துத் தன் நாயகனது தரிசனம் தனக்கு விரைவில் கிடைக்குமாறு அருள் புரியப் பிரார்த்தித்துவர ஒரு வெள்ளிக்கிழமை மாலை, கோயிலை நோக்கிப் புறப்பட்டாள். அவள் பாதிதூரம் சென்றதும், செல்லாததும், அவ்வழியே வந்த ஒரு துஷ்டவாலிபன் அவளைக்கண்டு, பொருந்தாப் புன்மொழிகள் சில, தன் ஆசைதோன்றப் புகன்றான். இதைக் கேட்ட அம்மாது எவ்வளவு சினந்தும், கருமமே கண்ணாயினனான அவன், அதனைப் பொருட்படுத்தாமல் சில கயவர்கள் உதவியால் அவளைக் கொண்டேகினன்.

"மாதா பிதா செய்யும் பாவம் மக்களைப் பிடிக்கும்" என்ற பெரியார் உரை அவலமாமோ? பார்ப்பனப் பதிவிரதையின் சாபம் பலித்தேவிட்டது: மாசிலாமணி அன்னியன் பெண்ணைக்கெடுக்க முயல, அவரது அருமைமகள், பிறன் ஒருவனால் கெடுக்கவே பட்டாள்.

க. அ. அப்துல்வாஹித், நாகூர்,

கடவுள் வணக்கம்.

["ஸ்வாமி தேவனே! லோகபாலனே!" என்ற கன்னடச் செய்யுளின் கருத்தைத் தழுவி யெழுதப்பட்டது.]

கடவுளே! உலகம் யாவும் காத்தளிப் பவனே! போற்றி.
மடமையேம் தம்மை அன்பின் மாட்சியாற் காண்பாய் போற்றி.
அடியரைத் தர்ம மார்க்கம் அடைந்திடச் செய்வாய் போற்றி.
கடல்நிகர் அன்பால் எம்மைக் கடைக்கணித் தருள்வாய்! போற்றி. (1)

தேவர்க்குத் தேவனே! யாம் செய்கையால் மனத்தால் வாக்கால்
மேவுறச் செய்த பாவம் விளைந்தது நீ விலக்கல் வேண்டும்.
ஆவிநேர் ஜகந்நா தா! நீ அன்றியார் எமைப்பா லிப்பார்?
ஜீவகோடிகள் வாழ் வுன்றன் திருவருட் பயனே யன்றோ? (2)

இரவில்யாம் உறங்கும் போதும் இமைந்துகாத் திடுவோன் நீயே.
புரவலன் என்னும் நாமம் பொருந்தவ தன்மை நின்பால்.
வரம்நினை வேண்டல் போன்று வனப்புறு பறவை கூவப்
பரம! நின் அருளால் கங்குல் படர்ந்தொளி பரவிற் றென்னே! (3)

உத்தமோத் தம! நின் பாதத் தருபத்தி சிறந்த தாகும்.
இத்தரைச் செல்வம் கால்முன் ஏற்றிய விளக்கே ஆம். உன்
மத்தராய் நினைஎண் ணுதே மயங்கிவன் நெறிசெல் வார்க்குச்
சுத்தஞா னத்தையீந்து சுகமுறச் செய்தி எந்தாய்! (4)

ஆடிடும் போதும், உண்டி அருந்திடும் போதும், என்றும்
நாடிநீ அன்பால் எம்மை நன்குகாத் திடுவை நல்லோய்!
வாடியாம் துன்பு றுதும் வளமுறு செல்வம் பெற்றும்
நீடுநின ஏவல் செய்ய நீயருள் புரிகுவாயே (5)

தாயொடு தந்தை நீயே. தகைமைசால் நண்பன் நீயே.
ஏயநற் சுற்றம் புத்தி எழில்தரு பேறும் நீயே
நீளமைப் பாலிப் பாயேல் நினைவொடும் எமைக் காப் பார் யார்?
தூயநின் பணிக்கா ளாக்கித் துயரொழித் தருளுவாயே. (6)

தேவ! நின் பாதம் எண்ணில் சென்மசா பல்யமாகும்.
யாவன்நின் நினைவோ(டு) ஈவன் யாருமே அவன்கை மேலாம்.
நாவின்நின் நாமந்தன்னை நவில்பவன் புனிதனுவன்
பூவில் நின் றனைப்பூ ஜிக்கும் புண்ணியன் கண்யனுவன் (7)

மண்ணொடு புனலும் தீயும் மற்றுள வளியும் வானும்
எண்ணமும் ஆகி நின்றே இலங்கிடும் எங்கள் கோனே!
கண்ணிய! நீகாணுத காரியம் சகத்தி லுண்டோ?
புண்ணிய! யாம்கா ணுஞ்செய் புரை யொழித் தருளுவாயே. (8)

சே. ரா. கணபதி சுப்பிரமணிய ஐயர், தமிழ்ப்பண்டிதர்,
கோபிசெட்டிபாளையத்திற்கடுத்த பிச்சாண்டான்பாளையம்

பெஞ்சமின் பிராங்க்லின்.
Benjamin Franklin.

அத்தியாயம் 5.

அச்சுக்கூடம் அமைத்தல்.

ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் டொன்றாகும்.
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன்செயல்.—ஔவையார்.

இங்கிலாந்திலிருந்து பிலடல்பியா திரும்பிய பிராங்க்லின், முன் சொன்ன பிரகாரம், டென்ஹாம் என்பவரிடம் வேலைக்கமர்ந்தான். அவர் மிகவும் நல்லவர். பெஞ்சமினிடம் அதிக அன்புள்ளவர். இவனும் அவரிடம் எஜமான விசுவாசத்துடன் வேலைபார்த்து வந்தான். ஆயினும் இருவரும் அதிகநாள் சேர்ந்திருக்க இவர்களுக்குக் கொடுத்துவைக்கவில்லை!: இருவரும் ஒரேவித வியாதியால் பீடிக்கப்பட்டனர். பாவம்! டென்ஹாம் சில தினங்களில் அவ்வியாதிக்கிரையாயினர். கடவுள் கிருபையால் பெஞ்சமின்மட்டும் பிழைத்தான். டென்ஹாமின் எதிர்பாராத மரணத்தால் அவர் கடை மூடப்பட்டது. ஆகவே, பெஞ்சமின் வேறோரிடத்தில் வேலை தேடிக்கொள்ள நேர்ந்தது. இது நிற்க

முன்பு பெஞ்சமினை வேலைக்கமர்த்தியிருந்த கீமர், பெஞ்சமின் அவனைவிட்டுப் பிரிந்ததுமுதல், தக்க வருமானமின்றியும், திறமைவாய்ந்த வேலையாட்களின்றியும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். அவரிடம் வேலைதெரியாத ஐவர் அமர்ந்து, குறைந்த சம்பளத்தில் வேலைசெய்து வரலாயினர். வேலைதெரிந்த ஒருவனைத் தக்க சம்பளத்திற் சிறிது காலத்திற்கு அமர்த்தி, வேலைதெரியாத சிப்பந்திகளுக்கு வேலை கற்றுத்தரச்செய்து, பிற்பாடு அவனை எக்காரணங் கூறியேனும் விலக்கிவிட வேண்டுமென்று கீமர் எண்ணினர். டென்ஹாமின் மரணத்தையும் அவர் நடத்திய கடை மூடப்பட்டதையும் அதனால் பெஞ்சமின் வேலை தேடிக்கொண்டிருக்கும் விஷயத்தையும் அறிந்த கீமர், அவனைத் தன்னிடம் வேலைக்கு முன்னினும் அதிகச் சம்பளத்தில் அமருமாறு கேட்டுக்கொண்டார். தனக்கேற்ற வேறு

வேலை ஏதும் அப்போது கிடையாமையின், பெஞ்சமின் இதற்கு உடன்பட்டு வேலைக்கமர்ந்தான்.

அங்கு அவன் தன் கீழ்வேலை பார்த்துவந்த சிப்பந்திகளுக்கு எவ்வளவு கற்பிக்க முடியுமோ அவ்வளவும் கற்பித்து வந்தான். ஆதலின் அவர்கள் இவனிடம் மிக்க அன்புடனும் மரியாதையுடனும் நடந்துகொண்டனர். இவர்களில் பெஞ்சமினிடம் அதிக விசுவாசம் வைத்து நலம் பாராட்டியவன் மெரிடித் (Merdith) என்பவன். அச்சுவேலை சம்பந்தமாய்க் கற்கவேண்டிய விஷயங்களைக் குறைந்த சம்பள வேலைக்காரர்கள் அநேகமாய்க் கற்றுக்கொண்டுவிட்டார்களென்பதை அறிந்த கிமர், தம் பழைய சங்கற்பப்பிரகாரம் பெஞ்சமினை விலக்கிவிடவே தீர்மானித்தார்: தக்க காரணங்களின்றி அவனைக் கண்டிக்கவும் குறைகூறவும் தொடங்கினர். கடுஞ்சொற்களையும் உபயோகப்படுத்தினர். ஆயினும் பெஞ்சமின், இவருடைய கோபததிற்குக் காரணம், குடும்பக் கவலையோ அல்லது பிற நிகழ்ச்சிகளோ என்று கருதி, அவற்றைப் பொறுத்திருந்தான். பொறுமைக்கும் ஒரு அளவு உண்டல்லவா! பின்நிகழ்ந்த ஓர் அற்ப சம்பவமே அவன் கிமரிடமிருந்து விலகிக்கொள்ளக் காரணமாயிருந்தது.

ஒருநாள் அக்கம்பக்கத்தில் பேரிரைச்சல் ஒன்றுகேட்க, வேலை செய்துகொண்டிருந்த பெஞ்சமின், கூச்சலின் காரணமறியப் பலகணியின் வழியே எட்டிப் பார்த்தான். அச்சமயம் வெளியே நின்றுகொண்டிருந்த கிமர், இதை ஒரு வியாஜமாகக்கொண்டு வெகுண்டு, புலர் முன்னிலையில், "நீ வரவரச் சோம்பேறியாய்விட்டாய். கூலிக்குத் தக்கவேலை செய்வதே இல்லை. உன்னை வேலைக்கமர்த்தும்பொழுது ஏதேதோ நினைத்திருந்தேன். கழுப்பைத் தவிர உழைப்பினைக் கண்டிலேன். நம் ஒப்பந்தம் நிறைவேறும் ஒவ்வொரு விநாடியும் எனக்கு ஒவ்வொரு யுகம்போலிருக்கிறது. அதற்குள் உன்னால் எனக்கு என்னென்ன நஷ்டங்கள் உண்டாக இருக்கின்றனவோ'' என்று இரைந்தான். இரையவே, இருவருக்கும் வாக்குவாதம் வரவர முற்றலும், பெஞ்சமின் அரைக்கணமும் அங்கு இருக்கப் பொறுனப், ஒப்பந்தத்தை அக்கணமே 'ரத்து'செய்து தன்னை விலக்கிக்கொள்ளத் தனக்கு பூர்ண சம்மதமென்றும், கிமர் தன்னால் வீண் நஷ்டத்திற்கு உள்ளாகவேண்டாமென்றும் கூறி, அவரிடமிருந்து விலகிச்சென்றான்.

கீமரிடமிருந்து விலகிக்கொண்டவுடன் மெரிடித் பெஞ்சமினைச் சந்தித்து, கீமர் கடனாளியாய் விட்டாரென்றும், அவருடைய அச்சுக்கூடம் அதிவிரைவில் எடுபட்டுவிடுமென்றும் ஆதலால் தானும் அவனும் சேர்ந்து ஒரு அச்சுக்கூடம் அமைக்கலாமென்றும்; வேலைதெரிந்த பெஞ்சமின் தன் கூட்டாளியென்று தன் தகப்பனுருக்குத் தெரிந்தால் அவர் கட்டாயம் திரவிய சகாயம் செய்வாரென்றும், வரும் லாபத்தில் ஈவுவைத்து இருவரும் பகிர்ந்துகொள்ளலாமென்றும் சொல்ல, பெஞ்சமினும் அவன் யோசனைக்கிணங்கினன். இவ்விஷயம் அறிந்த மெரிடித்தின் தகப்பனர் அவனுக்குத் திரவிய சகாயம்செய்ய உடன்பட்டார். பெஞ்சமின் அச்சுக்கூட அமைப்பிற்கு வேண்டிய சாமான்கள்வாங்க ஒரு குறிப்புத் தயாரித்து அவரிடம் கொடுக்க, அவர் அதை ஒரு வியாபாரியிடம் கொடுத்து, லண்டனிலிருந்து சாமான்களை வரவழைக்க உத்திரவிட்டார். சாமான்கள் கைக்குவந்து சேரும்வரை இவ் விஷயத்தை அவர்கள் எவர்க்கும் வெளிப்படுத்தவில்லை. சாமான்கள் வருவதற்கு நாட்சென்றதாலும், வேறுவேலை கிடைக்காததாலும், பெஞ்சமின் சிறிதுகாலம் வேலையற்றுஇருக்க வேண்டியிருந்தது. இச்சமையம் நியூஜேர்ஸி (New Jersey) மாகாணத் துரைத்தனத்தார் 'செலாவணி நோட்டு' அச்சடிக்கத் தீர்மானித்தார்கள். இதை யறிந்த கீமர், தக்க வருமானம் வரத்தக்க இவ்வேலையைத் தாமே செய்துகொடுக்க எண்ணினர். ஆயினும் இவருக்கோ அதைச்செய்து முடிக்கும் திறமை கிடையாது. தம்போன்ற அச்சுக்கூடத்தலைவனை வேறொருவன், அத்தொழிலில் அதிநிபுணனை பெஞ்சமினை அமர்த்திக்கொண்டு அக்காரியத்தை முடித்துத்தர ஏற்பாடுசெய்யக் கூடுமென்று அஞ்சித் தான் முன்பு விலக்கிய பெஞ்சமினை மீண்டும் வரவழைத்து வேலைக்கமர்த்திக்கொள்ளத் தீர்மானித்தான். ஆசை வெட்க மறியாதல்லவா? அவன், அற்ப மனஸ்தாபத்தின் பொருட்டுப் பிரிந்துசெல்லல் நண்பர்களுக்கு அழகல்ல என்றும், நிகழ்ந்த விஷயங்களுகாகத் தான் வருந்துவதாகவும், எல்லாவற்றையும் மறந்து உடனேவந்து வேலையை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், நய மொழிகள் பல புகன்று ஒரு கடிதம் பெஞ்சமினுக் கெழுதினன். இக்கடிதத்தை மெரிடித்திடம் பெஞ்சமின் காட்டினன். இங்கிலாந்திலிருந்து சாமான்கள் வரும் வரை, பெஞ்சமின் கீமரிடம் வேலைக்கமர்ந்திருப்பது தங்களிருவருக்கும் நலமாயிருக்குமென்று மெரிடித் அபிப்பிராயப்பட, பெஞ்ச

மின் மேரிடம் வேலைக்கமர்ந்தான். அமர்ந்ததும், பெஞ்சமின் செலாவணி நோட்டு' அச்சிடச் செப்புத்தகட்டில் அதி நூதனமான ஒரு கருவி அமைத்தான். இது மாதிரியான கருவி அமெரிக்காவில் அதற்குமுன் இருந்ததில்லை. பல வேறு விதங்களில் செய்யப்பட்ட அலங்காரங்களுடன் அது விளங்கியது. இக் கருவியுடன் பெஞ்சமினும் மேரும் நோட்டுக்கள் அடிக்குமாறு, 'பர்லிங்டன்' நகர்வந்து சேர்ந்தனர்.

அம்மாகாணத் துரைத்தனத்தார் தங்களுக்கு வேண்டியதற்கு மேல் அதிக 'நோட்டு'கள் அச்சடியாமற் பார்த்துக்கொள்ள சில பிரமுகர்களை நியமித்தனர். இவர்கள் பெஞ்சமினுடன் கூடவேயிருந்து கவனித்துவந்தபோது, அவனுடைய திறமையையும், தகுதியையும் கண்டு வியந்தனர். இவர்களில் ஐஸாக் டி கோவ (Isac De Cov) என்பவர் பிரபலர்.

இவர், பெஞ்சமினைப்போலவே மிகுந்த கேவல ஸ்திதியிலிருந்து சுப முயற்சியால் முன்னுக்குவந்தவர். சிறுவயதில் செங்கல் வேலைக்காரர்களுக்கு மண்சுமந்து வந்தவர். வயதான பின்பே எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டவர். பின்பு நிலமளப்போர்க்கு உதவியாக அளவு சங்கிலி தூக்கும் தொழிலில் அமர்ந்தவர். சுருங்கச் சொல்லின், தம்முயற்சியால் மிகவும் உன்னதபதவியுற்று அதிகப்பணமும் பூஸ்திதியும் படைத்தவர் இவர்.

இவர் பெஞ்சமினின் மதிவன்மையையும், உழைப்பையும் கண்டு, "பெஞ்சமின்! நீ வெகு சீக்கிரம் முன்னுக்கு வருவாய். அதி விரைவில் எஜமானத்துவமே பெறுவாய்" என்று வியந்துரைத்தார்.

வேலை முற்றும் நிறைவேற மூன்று மாதங்கள் சென்றன. பிறகு மேரும் பெஞ்சமினும் பிலடல்பியா வந்து சேர்ந்தனர். இதற்குள் இங்கிலாந்திலிருந்து குறித்த சாமான்கள் வந்துசேரவே, பெஞ்சமினும் மெரிடித்தும் மேரிடம் விலகிகொண்டு சொந்தத்தில் அச்சுக்கூடம் வைத்து நடத்தலாயினர்.

இவர்களுக்கு முதல் முதல் கிடைத்த வேலை ஐந்து ஷில்லிங் பெறுமானதே. அதைத் தக்க சமயத்தில் கிடைத்த பெறலருந் திரவியமாகப் பெஞ்சமின் கருதி மகிழ்ந்தான். அவன் தான் ஏற்றுக் கொள்ளும் எந்த வேலையையும், எவ்வகை இடையூறு நேரினும்,

அவைகளை எல்லாம் மேற்கொண்டும் குறித்தநோக்கில் வேலைகொடுத்தவர்களுக்குத் திருப்தியுண்டாகும்படி நிறைவேற்றிவந்ததால் அவனுடைய பேரும் புகழும் எங்கும் பாவலாயின. "உழைப்பின்வாரா உறுதிகள் உளவோ?"

P. சுந்தரராஜையங்கார் பி. ஏ.
சரித்திராசிரியர், க்ஷத்திரியவித்யாசாலை, விருதுநகர்.

விநோதக் கூற்று.

அந்நிய வஸ்து பஹிஷ்காரம்.

தேசத்தொண்டர் கூட்டத்து ளொருவன், 'கதர்' ஆடையணிந்துகொண்டும், அடிக்கடி "வந்தேமாதரம்" என்று கூறிக்கொண்டும், தேசபக்த வியவகாரங்களில் ஈடுபட்டதாகப் பாவனை செய்துகொண்டிருப்பினும், மிக்க விலையேறப்பெற்ற சீமைப்புகைச்சுருட்டொன்றை வாயில் வைத்துப் புகைத்துக்கொண்டிருப்பதைக் காணச் சகியாத

ஒரு பெரியார்:-"அப்பா! உன்னைப்பார்த்தால் மிகச்சிறு பிராயத்தனயிருக்கிறாய். ஆயினும் தேசபக்தகோஷ்டியிற் சிறந்தவனாகக்காணப்படும் நீ, நல்லோர் யாவராலும்,—எத்தேசத்தவராலும், எம் மதத்தினராலும் எப் பிராயத்தினராலும்—எப்பொழுதும் வெறுக்கத்தக்கதும், பிறநாட்டுப்பொருளும் உஷ்ணபூமியாகிய நம்நாட்டினர்க்கொரு சிறிதும் அவசியமில்லாததும், மனம், வாக்கு, காயங்களுக்கு மிகுந்த இடையூறு வருவிப்பதும், இம்மை மறுமைகளைப் பாழ்படுத்துவதும், விள்ளரிய விபரீதங்கள் வாய்ந்ததுமான புகைச்சுருட்டை உபயோகிக்கலாமா? தவிரவும் தேசத்தொண்டனாகிய நீ, அந்நியநாட்டுப் பொருளைக்கைக்கொள்ளல் தகுதியோ? அவற்றைப் பஹிஷ்கரிக்க வேண்டாவோ? என்றார்.

"சிறுவன்:—" ஐயா, தாங்கள் கூறியது முற்றிலு முண்மையே!, ஆயினுந் தாங்கள் எங்கள் "ப்ரதிஜ்ஞை"யை உள்ளபடி உணராததாலேயே இவ்வளவு வார்த்தைகளைச் செலவு செய்ய நேர்ந்தது; எங்கள் பரமகுருவும் தேசாபிமான ஸிம்ஹமுமாகிய மஹாத்மா காந்தியடிகள் அருளியுள்ள திவ்யோபதேசத்தின் ஸாரத்தைத் தாங்கள் க்ஷஹிக்கவில்லை போலிருக்கிறது. "அந்யநாட்டுப் பொருள்களைத் தீக்கிரையாக்குக", என்பதே அவர் கட்டளை. அதனைப் பின்பற்றியே வெளிநாட்டுச் சுருட்டைக் கொளுத்திச் சாம்பராக்குகிறேன்" என்று சமத்காரமாய்ப் பதிலுரைத்தான்.

R. S. கங்காஜடேச சர்மா.

பராந்தகன்.

ஐந்தாம் காட்சி.

காலம்:—முற்பகல்.

இடம்:—கள்வர் மனை.

பாத்திரங்கள்.—இருளன், பேச்சி.

இரு:—நான் இங்கு வந்து ஆறு மாதங்களுக்கு மேலாகின்றன. இவ்வூரிலுள்ள சந்து பொந்துகள், இடுக்கு முடுக்குகள், கள்ளவழிகள் குறுக்குப்பாதைகள் முதலியன முற்றும் கற்றறிவதிலேயே என் பொழுதெல்லாம் கழிந்தன. நான் அறியாத ஆமனைகளும், நுழையாத குடிசைகளும் இல்லை. நான் எங்குச் சென்றாலும் நீக்காநிழல்போல என்மனச்சஞ்சலமும் என்கூடவே வருகின்றது. இதற்கென்ன செய்வேன்! எத்தனை பாட்டுக் கச்சேரிகளுக்குப் போய்ப்பார்த்தேன்! விநோத வேடிக்கைகள் எத்தனை கண்டேன்! மங்கள வாத்தியங்களும், இன்னிசைக் கீதங்களும் முழங்கு மிடந்தோறுஞ் சென்றும் என் சஞ்சலம் ஒழிந்தபாடில்லையே! எங்கும் இலைகூட அசையாதிருக்கும் இச்சமயத்தில் என் இருதயத்தில் பெரும்புயலன்றோ அடிக்கிறது!—ஹ்ம்—சரியாய் இன்றோடு ஆறு வருஷமாகிறது என் தந்தையைப் பிரிந்து. நான்கு வருஷமாகிறது என் தாயிறந்த அதி துக்கச்செய்தி கேட்டு. ஆறு வருஷங்களுக்குமுன்—இப்படிக்கொலைகாரர் மத்தியிலிருந்து நான் காலங்கழிப்பேன் எனக்கனவிலும் கருதியதுண்டோ? 'பட்டம் கிடைத்தவுடன் அது செய்யவேண்டும், இது செய்யவேண்டு'மென்று ஐயோ ஏதோ மனக்கோட்டை கட்டி மகிழ்ந்தேனே! கடைசியில் கொலைகாரனாகும்படியன்றோ என் தலையில் எழுதியாய் விட்டது. ஐயோ! இத்தொழில் செய்ய உடன்பட்டு உயிர் வாழ்வதிலும் பிச்சை எடுத்து வயிறு வளர்ப்பது எத்தனை மேன்மை! எனது வயோதிகத் தந்தையார், புத்திரவாஞ்சையால் என்னை அடிக்கடி வாரியெடுத்து அணைத்து, முத்தமிட்டு, "கண்மணியே! காதலனே! நாலம்போய் யான்பெற்ற ஒண்மணியே! வீட்டின் ஒளி விளக்கே! எனக்கோ மூப்பு மேலிட்டுவிட்டது. பாநுகுல இளஞ் சூரியன் நீ—நீயே நின் குணக்கதிர் பரப்பி நம் குலப்பெருமை ஓங்குமாறு

புரியத்தக்கவன்.'' என்றுதட்டிக்கொடுத்துக் கூறியபோது, என்னை
அறியாமல் எவ்வளவு உற்சாகம் உதித்தது! அப்பொழுது என்
னென்ன நினைத்தேன்! எல்லாம் பொய்யாய்ப் பழங்கதையாய்ப்
போயிற்றே!. சீ! இஃதென்ன மௌடீகம்! சென்றதை நினைத்துச்
சிந்தை நோவதிற் பயனென்ன? நினைக்க நினைக்க எனக்குப் பெரும்
பைத்தியம் பிடிக்கும் போலிருக்கிறது. கடவுளே! குலோத்துங்
கனது மகனாகியும் நான் போக்கிலிகளுக்கும் பயங்கொள்ளிகளுக்
கும் கேவலம் அடிமைத்தொழில் புரியவும், கொலைஞர் தொழிலிற்
புகவும் வேண்டுமென்பதோ உனது திருவுள்ளம்?

[சிறிதுநேரம் பெருமூச்சுவிட்டுச் சிந்தித்து]

இதுதான் சரி—சத்தியம்—இதுவே சரி. குலோத்துங்கன் குலதீப
மாக இருக்கும் பேறுபெற்றிலேனாயினும், பயங்கரக்கொலைப்பாதக
னாக இருப்பதில் எனக்கு எவ்வகைச் சிரமமுமில்லை—பாசாந்தி
யுற்ற எனது அருமைத் தந்தாய்! அன்பொருவடிவாயமர்ந்த என்
அன்னாய்! ஸ்தூல தேகத்துடன் நீங்கள் இங்கு இல்லையாயினும்
சூக்ஷ்ம தேகத்துடன் என் செயல்களைக் கவனித்து எனக்குத் திரு
வருள்புரிந்து வருகிறீர்கள் என்ற பூர்ண நம்பிக்கை எனக்குண்டு.
முன்னறி தெய்வமாகிய நீங்களும், பின்னறி தெய்வமாகிய குரு
வும், கடவுளும் அறிய யானுரைக்கும வஞ்சினம் இதுவே: நான்
'கொலைபாதகத் தொழிலிற் புகவே செய்வேன். ஆயினும் குலக்
கேடான தொழில் ஒருபோதும் புரியேன். மரணாந்தகாலத்தில்
நீங்கள் கூறியமொழி இம்மியும் தவறாது நடப்பேன்—இது சத்தி
யம்—இவ்வூரில் இனிக் கொடுந்தொழிற் கொலைஞன் நான் ஒருவனே
ஆதல்வேண்டும். நான் செய்யும் அதிஈனத் தொழிலும் பெரு நன்
மையையே விளைக்க இறைவன் திருவருள் புரிவானாக.

[யோசிக்கிறான்.]

இனி இந்த மகாத் துரோகிகள் ஐவருடன் சேர்ந்து உயிர்க்கொலை
புரியேன். நான் ஒருவனாகவே யிருந்து ஊர் முழுதும் அலற அடிப்
பேன். இன்னும் எட்டே நாட்களுக்குள் இப் பஞ்சமாபாதகர்கள்
தூக்கில் சுருக்குண்டு தொங்குவதை எனது இக்கண்ணால் பார்க்க
வே செய்வேன். இவ்வூர்க் கினி கொலைபாதகர் ஐவரில்லை. ஒருவ
னேதான். இந்த ஒருவனும் இனிப் பாண்டியனையே நேர்க்குநேர்
எதிர்ப்பான். துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்வான்: இவ்
வைவர்களும் போய், அவர்கள் ஸ்தானத்தில் இன்னும் ஓரே வாரத்

திற்குள் நான் ஒருவனே பரம சண்டாளனாக இருப்பேன். இது திண்ணம். இவ்வவரிடத்தில் போக்கு வரவு செய்துகொண்டு அவர்கள் மூலமாக காரியசித்திபெற்றுக் காலங்கழித்துவரும் அயோக்ய சிகாமணிகள், இனி அவர்களைக் காணாது, அவர்கள் கூட்டாளியான என்னையே நாடித் தம் காரியங்களை முடித்துக் கொள்ள வருவர். அப்பொழுது அவர்கள் மூலம் இதற்குமுன் மாயாண்டியும் அவன் கூட்டாளிகளும் யார் யாரை எவ்வெதன் பொருட்டுக் கொலை செய்துள்ளார்கள் என்பதையுமறிந்து, நெறியிழந்த அத் தூர்த்தர்களையும் தக்கவாறு சிட்சிப்பேன். நல்லது. நல்லது! "பயங்கரன்" என்ற வார்த்தையைக் கேட்குந்தோறும் கோடையிடியுண்ட கோணகம்போல் யாவரும் குலை குலைந்து நடுங்குக.

[பேச்சி வருகிறுள்]

பேச்சி:—என்ன இருளா! என்ன சொல்லிக்கிட்டிருக்கே?

இரு:—(திடுக்கிட்டு) வாடியாத்தா, என்ன?. நீதான் சொல்லேன்! நீதான் கேட்டுக்கிட்டிருந்தியே.

பே: —கேட்டுக்கிட்டிருந்தா, என்ன இண்டு கேப்பேனு மறுத்து? இப்பத்தான் வந்தேன். 'எம் பேரைக்கேட்டு எல்லாரும் நடுங்குக' இண்டதுதான் தெரியும். ஆரை நடுங்கச்சொன்னேண்டில்லே கேக்கறேன்.

இரு:—(தனக்குள்) நல்லவேளை. இவள் இப்பொழுதுதான் வந்திருக்கவேண்டும். நான் எனக்குள் பேசியதை இவள் அறிந்திலள் (வெளிப்படையாய்) ஆரை? நம்மைப் பகச்ச பயகளைத்தான்.

பே:—அதுக்குச் சந்தேகமா? நீ இருக்கிறபோது எங்களுக்கு என்ன கொறச்சல். இது கெடக்கிறது. நாளி ரொம்ப ஆச்சுது. வா, சாப்பாட்டுக்கு நேரம் ரொம்ப ஆயிடிச்சு.

இரு:—சரி. போவோம் வா.

[இருளனும் பேச்சியும் போகின்றனர்.]

[ஐந்தாம் காட்சி முற்றிற்று.]

திருக்குடந்தை: ஆயக்கண்ணனார்.

பாரத பாத்திரங்கள்

(113-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

பீஷ்மன்.

பீஷ்மனைப் போன்ற ஓர் மகா கம்பீரமான பாத்திரப் பிரயோகத்தை இந்திய இலக்கியங்களிலன்றி வேறெங்கும் காணமுடியாது. பீஷ்மனையும், கன்னனையும் லக்ஷ்மணனையும் பரதனையும் சிருஷ்டிக்கும் ஆற்றல், வியாசன், வால்மீகி, கம்பன் முதலிய முதல்தர கவி வல்லுநர்களின் மனோபாவ முதிர்ச்சிக்கே உண்டு. பாரத நாட்டின் உயரிய கொள்கைகள், குணங்கள், தத்துவங்கள் அத்தனைக்கும் இலக்காக இலங்குகின்றான் பீஷ்மன். பீஷ்மனைப்பற்றி ஒருவன் சரிவர அறிந்து கொள்வானானால், இந்திய வாழ்க்கையின் உன்னத தத்துவங்களையெல்லாம் அவன் தெரிந்து கொண்டவனாவான். பீஷ்மனிடத்திலேயே மிக்க காம்பீர்யத்தை, தன்னல மறப்புணர்ச்சியை, உறுதியின் இறுதியை, பக்தியின் பரிபக்குவதிசையை, மனித சுபாவத்தின் மகோன்னத நிலைமையை, ஆன்மஞானத்தின் தத்சொரூப விளக்கத்தை வியாசன் ஏற்றி வைத்திருக்கிறான். இங்கப் பீஷ்மனையும் கர்னனையும் கற்பிக்கும்போது தான், காவ்ய, பாத்திர நிர்மாண சக்திகள் எல்லாவற்றையும் வியாசன் அப்படியே கொட்டிவைத்திருக்கிறான். பீஷ்மனை எதற்காக வியாசமகிரிஷி பாரத கதையில் நுழைத்திருக்க வேண்டும்? இந்தப் பாத்திரப் பிரயோகம் கதையின் முக்கிய சம்பவத்தின் நிகழ்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் ஏதாவது அமைப்பையும் அந்தத்தையும் தருகிறதா? பீஷ்மன் இல்லாவிட்டால் கதை சீர்குன்றி, தொடர்ச்சியான வளர்ச்சியின்றி, இயற்கையான முடிவு பெறாதா? ஆம்: ஆதிமுதல் சந்திரவம்ச சரித்திரத்துக்கு ஒருவித சோபையைத்தந்து பொலிவு பெறச் செய்வது பீஷ்மனின் சேர்க்கை தான். அவனை நீக்கி விடின் இப் பெருங்கதையின் ருசி சற்று குறையத்தான் செய்யும்.

பீஷ்மனைக் கதையில் புகுத்தும்போது கிரந்தகர்த்தாவுக்குப் பல காரணங்கள் இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இந்நெடுங்கதை நிகழ்ந்த காலத்தின் நாகரீகம், பழக்க வழக்கங்கள், சட்டதிட்டங்கள், கொள்கைகள், குணங்கள், தத்துவங்கள், அரசியல் முறைகள், பொருளாதார நிலைமை முதலிய எல்லாவற்றிற்கும் இருப்பிடமாக, தான் இயற்ற விருக்கும் ஒரு பெருங் காப்பியத்தில். சகல உத்தம குணங்களும் அமைந்த அதிசிலாக்கியமான குற்றமற்ற ஒரு பாத்திரத்தை அக்காலத்தின் உயரிய உணர்ச்சிகளுக் கெல்லாம் அறிகுறியாக அமைக்க முயலுவது கவியின் இயற்கையான ஆஸ்தையே யாகும்,

கதையிலே கலவரங்களும் கஷ்டங்களும் சூழ்ச்சிகளும் பொறாமை உணர்ச்சிகளும் விரோத பாவங்களும் பல சம்பவிக்கின்றன. முடிவில் பெரிய யுத்தம் ஒன்று ஏற்படுகிறது. சகல தர்மங்களையும் தன் நூல் மூலம் உலகினருக்கு ஊட்ட விரும்பும் வியாசன், அவைகளைப் பொருத்தமான இடத்தில் தக்க மனிதன் வாய்வழியாக வெளியிடுவது கதையின் அமைப்புத் திறனை அதிகரிக்கச் செய்வதொன்று. கதையின்முகலில் தர்மோபதேசம் தொடங்கிவிட்டால் ரஸிகர்களான வாசகர்களுக்கு சலிப்புத் தட்டக்கூடும். இடையிலே படிப்பவர்களின் மனம் கதைச் சம்பவங்களைத் தொடர்ந்து நிற்குமாதலால் அவர்கள் கவனத்தைக் கவருதல் மிகவும் கஷ்டம். அப்படியே வாசகர்கள் ஆரம்பத்திலாவது நடுவிலாவது சற்போதனைகளைக் கவனிக்கும்படி நேரிட்டாலும் அவைகளை அவர்கள் மனதில் அழுத்தமாகப் பதிந்து போதிய பயனைத் தராமல் தடுக்க பின்னால் ஏற்படும் கலவரங்களும் அகோர யுத்தமும் காத்திருக்கின்றன. ஆகவே கதையின் இறுதியில் வாசகர்களின் கவனமும் மனமும் ஒருவித சமாதான நிலைமைக்கு கொண்டு வரப்பட்ட பிறகு, ராஜ நீதியையும் மற்ற தர்மங்களையும் உபதேசத்திலே சிறந்த முறை. அதற்கு எவ்விதத்திலும் ஏற்றவன் பீஷ்மனே. தியாகத்தின் சிறப்பையும் உறுதியின் உன்னதத்தையும் உபதேசிப்பவன் அவைகளை அனுஷ்டித்தவனாக இருத்தல் இன்றியமையாததன்றோ? இதை உத்தேசித்தே சாமான்ய நியாயத்துக்கு விரோதமாகத் தோன்றினாலும், மிகநீண்ட ஆயுட்காலத்தை பீஷ்மனுக்குக் கொடுத்த, இறுதிவரை வைத்திருக்கிறான் போல் இருக்கிறது கவி.

அதிவீரர்களான அர்ச்சுனன், பீமன், திருஷ்டத்துய்மன், கண்ணன் முதலியவர்கள் அடங்கிய பாண்டவ சேனையை, யுத்தத்துக்கு, எதிர்த்துநிற்கும் சுயோதனனுடைய பக்கத்துக்கு ஒரு வலுவைக் கொடுப்பதற்காகவும் பீஷ்மனை யுத்தம்வரையில் உயிருடன் வைத்திருந்து கலந்துகொள்ளும்படி செய்யவேண்டியது காவ்யகர்த்தாவுக்கு அவசியமாயிற்று.

மேலும் சந்தனு காலகதியானபிறகு அவனுடைய வீரியமற்ற குமாரர்களின் சார்பாக இராஜ்யத்தை நிர்வகித்துவரவும், திருதராஷ்டிரனும் பாண்டுவும் உற்பத்தியாகி, யுக்த வயதுவந்து அரசியல் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளும் வரையில் அரசாட்சியை நடத்திவரவும் பீஷ்மனை உபயோகித்துக்கொள்ளுவது கவிக்குச் சுலபமாக இருந்திருக்கிறது. சந்தனுவின் மரணத்துக்குப்பின், கௌரவர்களும் பாண்டவர்களும் தோன்றி வாசகர்களின் கவனத்தைக் கவர ஆரம்பிக்கும்வரை கதையின் தொடர்ச்சியை பீஷ்மனே காப்பாற்றுகிறான். பீஷ்மனைப் புகுத்தியிருப்பதற்கு வேறுபல முகாந்திரங்களும் உள்ளன.

கதையில் பீஷ்மன் தோன்றும் இடங்களின் ரசனையின் அமைப்பைச் சிறிது நோக்குவோம். பீஷ்மன் செய்கைகள் கதையின் ரசனைச் சுவையை அதிகரிக்கும்படி செய்வதைக்குறித்து பூர்ணமாக ஆராய இங்கு இடம் போதாது. மச்ச ராஜனிடம் பெண் கொடுக்கும்படி வேண்டும்போது அவன் காட்டும் தன்னலமறுப்பும் உறுதியும், காசி ராஜன் பெண் அம்பா சாளுவனிடம் உடனே செல்ல அனுமதித்த அவன் காமபீர்யமும் யுத்தத்தில் பக்ஷபாதமின்றி நடந்துகொண்டமையும் கதையின் கவர்ச்சி நயத்தைத் தூக்கிக்காட்டி ரஸிகர்களின் மனதை சந்தோஷிக்கச் செய்கின்றன.

இனி நாம் கவனிக்கவேண்டிய விஷயம் பீஷ்மனுடைய நற்குணங்கள். அவனுடைய அருங்குணங்கள் யாவற்றையும் தாண்டி முன்னிற்பது தியாக உணர்ச்சி. 'தியாகம்,' 'தியாகம்' என்று வாய்ப்பறை சாற்றலாம். "சொல்வது எளிது; அரிதாம் சொல்லிய வண்ணம் செயல்". இல்லற வாழ்க்கையின் சுகபோக போக்யங்களையும், தன் பிறப்புரிமையான அஸ்தினபுரியின் ஏக சக்ராதிபத்யத்தையும், தகப்பனின் திருப்திக்காக வெறுத்த அவனுடைய தன்னல மறுப்பையும் எப்படிப் புகழ்ந்து கூறுவது?. தன் பொருட்டு அதாவது தன் செல்வம், செல்வாக்கு கீர்த்தி இவைகளை அபிவிர்த்தி செய்து கொள்வதற்காகச் சில காலத்துக்கு சுபநலந்தந்த ஒரு சிலரை நாம் பார்க்கக்கூடும். ஆனால் பிறர் பொருட்டு மனித வாழ்க்கையின் இனிமைக்கு ஜீவதாது போன்றவைகளை வெறுத்து வாழும் தியாகத்திறம் பீஷ்மன் ஒருவனைத் தவிர மற்றவரிடத்தில் காண்பதரிது. தமையன் பேரிலிருந்த பக்தி காரணமாக பதினான்கு வருஷங்கள் அன்ன ஆகார நித்திரையின்றி அவனுக்குத் தொண்டாற்றிய லக்ஷ்மணனின் தியாக உணர்ச்சி ஒருமட்டுக்கு பீஷ்மனருகே எட்டிப் பார்க்கிறதென்று கூறலாம். தந்தை, மச்சராஜன் மகளை மணக்க மனங் கொண்டதை அறிந்தவுடன் பீஷ்மன் செய்துகொண்ட சபதம் மிகவும் பயங்கரமானது. பயங்கர விரதம் எடுத்துக் கொண்டதனால் அன்றோ அவன் 'பீஷ்மன்' என்று அழைக்கப்படுவது. கொடிய பீதியையும் உயர்ந்த நன்கு மதிப்பையும் ஓரே நிமிஷத்தில் உண்டாக்க வல்ல இத்தகைய அற்புத சம்பவத்தை வேறெந்தக் காவியங்களிலும் ஒருவரும் கண்டிருக்கமுடியாது. அவன் தான் செய்து கொண்ட விரதத்தைத்தாமதியாமல் தியாகம் வேண்டப்பட்ட மறு நிமிஷத்திலேயேஎடுத்துக் கொண்டதுதான் அந்த விரதத்தின் மகிமையை இன்னும் அதிகரிக்கச் செய்கிறது.

உணர்ச்சிகள் உச்சஸ்தானத்தில் இருக்கும்போது யாரும் சபதம் செய்து கொள்வது சகஜம்; ஆனால் செய்த சபதத்தைப் பீஷ்மனைப் போல் கடைசிவரை காப்பாற்றியவர் வெகு சிலரே. சாளுவனால் மறுக்கப்பட்ட அம்பா மறுபடி திரும்பி வந்து பீஷ்மனை மணந்து கொள்க

ளும்படி வேண்டிக் கொண்டபோதுதான் அவன் உறுதி சோதனை செய்யப்பட்டது. தன் வாக்கைக் காப்பாற்ற அவன் அவளை மறுத்தல் அவசியமாயிற்று. ஆனால் பாசுராமன் அம்பாளுக்குச் சிபார்சு செய்ய முன் வந்தபோது பீஷ்மனின் நிலைமை கஷ்டத்திற்குள்ளாயது. கல்யாணம் செய்துகொள்ளும்படி கட்டளை இடுபவரோ தனக்கு கல்வி கற்பித்த குருநாதன்; மனச்சாக்ஷியின் ஆக்ஞைப்படி தேவர்கள் முன்னிலையில்தான் செய்து கொண்டிருப்பதோ தவிர்க்கத் தகாத பயங்கர விரதம். ஒரு பக்கம் குரு நிந்தை; மறு பக்கம் விரத பங்கம். இரண்டு பக்கங்களிலும் விலக்க முடியாத இடுக்கண். இருதலைக் கொள்ளி எறும்பெனத் திகைத்தான் பீஷ்மன். எப்படி நடந்தாலும் குற்றம். கடமை முரண் ஏற்பட்டது. ஆனால் பீஷ்மனின் உறுதி அவனைக்காப்பாற்றிற்று. குருவின் வார்த்தையை ஏற்று விரத பங்கம் செய்து நரகம் புகுவதைவிட, அவன் கோபத்துக்கு ஆளாகி அவன் விரும்பியபடி யுத்தம் கொடுத்து மதிப்பதே மேல் என்று தீர்மானித்தான். சோதனை காலங்களில் சோர்வுபடாமல் மேலெழுந்து நிற்பது தான் உறுதிக்கு லக்ஷணம். விரதம் தவறுவதிலும் இறப்பது மேல் என்று கருதுவது உத்தம மக்களின் உயரிய குணம். மானம் இழந்தபின் வாழாத பண்பினரன்றோ உயர்ந்தோர் எனப்படுவர்!

உலககவிகளின் மனோபாவங்களினின்று உதித்த உத்தம பாத்திரங்கள் எல்லாவற்றினும் பிரித்துத் தனிச்சிறப்புடன் விளங்கும்படி செய்வது அவனுடைய பிர்மசர்ய விரதானுஷ்டானம். 'பிர்மசர்யம்' என்றால் 'ஸ்திரி சுகத்தை நீக்கி வாழ்தல்' என்ற அபிப்பிராயம் நம்மவருக்குள் பொதுவாக இருந்துவருகிறது. ஆனால் உண்மை அப்படியல்ல. பிரமசர்யம் என்பதற்கு, 'பஞ்சேந்திரியங்களையும் அடக்கி ஆளுதல்' என்ற பொருளை கொள்ளுதல் வேண்டும். சர்வசுத்தமான வாழ்க்கையை நடத்திககாட்டி பிரமசர்யத்தின் முழு மகிமையையும் பீஷ்மன் நமக்கு நிரூபித்துள்ளான். அவனுடைய பெருமை மிக உயர்ந்தது. 'ஐந்தவித்தான் ஆற்றலை' யாரே அளவிட்டுக்கூறுதல் இயலும்? பிர்மசர்ய விரதானுஷ்டானத்திற்கும் நீண்ட ஆயுளுக்கும் மிக்க நெருங்கிய சம்பந்தம் உண்டென்ற உண்மை பீஷ்மன் வாழ்க்கையில் அறியக் கிடக்கின்றது. சக்தியை அடக்கிய சாந்த வாழ்க்கையே ஆயுளை அதிகரிக்கச் செய்யும் அற்புத ரகசியம். "ஒழுக்க நெறி நின்றார் நீடு வாழ்வார்" என்பது பொய்யாமொழி. இந்த உண்மையை பீஷ்மன் வாழ்க்கை வெள்ளிடைமலையென விளக்குகிறது.

பீஷ்மனுடைய மற்றொரு நல்ல குணம் பகவானிடமுள்ள பரம பக்தி. அவன் அன்பின் சொரூபம். அவனுடைய பக்தியின் உன்னதத்தை எடுத்துரைத்தல் எளிதல்ல. ஆயுதம் எடுப்பதில்லையென்ற கண்ணன் பீஷ்மன் பக்தியில் ஈடுபட்டு தன் வாக்குத் தவறினும் பக்தன் மொழி பிறழாவண்ணம் செய்தது அவன் பக்தியின் வலிமையே அன்றே!

பீஷ்மனுடைய விற்றிறமையைப் பற்றிக் கூறாமல் இந்த வியாசம் முடிவு பெறாது. இருபத்தொரு தலைமுறை ராஜவம்சங்களைக் கருவறுத்து, வில் வித்தையில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கிவந்த பரசுராமனையும் பீஷ்மன் முறியடித்தான். யுத்தத்திலும் வெகு திறமையுடன் கௌரவர் சேனைக்குத் தலைமை பூண்டு 10 நாட்கள் நடத்திவந்தான். கிருஷ்ணனை ஆயுதம் எடுக்கும்படி வற்புறுத்தியது அவன் போர்த்திறமையுமாகும்.

கடைசியாக எஞ்சி நிற்பது அவனுடைய அளவிலா அறிவு. அவன் அறிவின் பொக்கிஷம் கல்விக் களஞ்சியம். நமது தர்மங்களுக்கெல்லாம் இருப்பிடம். அவன் யுதிஷ்டிரனுக்கு ராஜநீதிகளையும் மற்ற தர்மங்களையும் உபதேசிக்கும்போதுதான், அதற்காகவே பீஷ்மனை வியாசன் சிருஷ்டித்திருக்கவேண்டுமென்ற உண்மை நமக்கு நன்றாக விளங்கும்.

பீஷ்மன் சகல விதத்திலும் சர்வோத்தமனாக விளங்கினாலும் அவனிடம் இரண்டொரு குறைகள் இல்லாமல் இல்லை; இது மனித சுபாவம். சூதாட்டம் தொடங்கும்போது அதைத் தடுக்க அவன் முயன்றிருத்தல் வேண்டும். அங்கிருந்தவர்கள் எவரையும்விட இந்தக் கடமை பொறுப்பும் அவனையே சார்ந்து நின்றது. திரௌபதி ராஜ சபையில் நிந்தனைக்குள்ளானபோது, அவள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்காது மற்றவர்போல 'பீஷ்மனும் ஊமை போன்றிருந்தது அவன் பெருமைக்கேற்றதன்று'. துரியோதனன் இவன் செய்வதைக் கேட்டு நடந்திருப்பானா? என்பது வேறு விஷயம்.

தான் யுத்தம் செய்வது அக்கிரம கக்ஷியின் சார்பாக என்பது அவன் அறியாததல்ல. இது ஒரு பெரிய குறை: 'செஞ்சோற்றுக் கடன்' என்றால் விளங்கவில்லை. அரசு இருந்திறத்தினருக்கும் பொதுவானதுதானே? மேலும் ராஜவிசுவாசத்தைவிட நியாய விசுவாசமன்றோ சிறந்தது! அரசனுக்காக யுத்தம் செய்யாமல் தர்மத்தின் பக்கம் தன் பலத்தை உபயோகிப்பதே சிறந்தமுறை. விதுரனைப் போல் விலகி நின்றிருந்தால் அது மெச்சத்தகுந்ததாயிருந்திருக்கும். விபீஷணன் வெளிப்பட்டு ராமனைச் சார்ந்து தன் தமையனைக் காட்டிக் கொடுத்தது எப்படி குற்றமோ அப்படியே பீஷ்மன் சுயோதனன் பக்கம் யுத்தத்தில் கலந்து கொண்டது தவறு என்று அடியேனுக்குத் தோன்றுகிறது. இவ்விஷயங்களில் எவ்வகை தவறான எண்ணமேனும் எனக்கிருப்பதாக அறிஞர்கள் காண்பரேல், அவற்றை எனக்கறிவித்துத் திருத்துமாறு வேண்டுகிறேன்.

[இனனும்வரும்]

ஸ்ரீ: பார்த்தஸகன்.

ஏகாந்தவாழ்க்கை அல்லது தனிமைப்பேறு

[இது Alexander Pope என்ற ஆங்கிலகவி இயற்றிய "Ode on Solitude" என்பதன் மொழிபெயர்ப்பு]

தன்னுடை முன்னோர் வழிகொள்சில் காணி
தம்மையே ஓம்பலிற் கருத்தும்,
தன்நில மிசைஅந் நிலவளி உயிர்க்கும்
தன்மையில் திருப்தியு முற்று;
தன்நிரை பாலும் தன்வயல் ஊணும்
தன்பருத் திப்பயிர் உடையும்
தன்மரம் கோடை வேடையில் நிழலும்
தண்ணிய மாரியில் தீயும்,

உதவ; நோயின்மை, நிம்மதி, பகலில்
உலைவிலா உளம், இராப் பொழுதில்
இதமுறு துயில், ஓய் வொடுகலை பயில்கை,
இனியநல் விநோதம், யோகியர்கள்,
அதிமகிழ் புனிதம் எனும் இவற் றொடுதற்
கமைந்துள ஓரை, நாள், ஆண்டு,
சதுமென நழுவப் பற்றெதும் இலனைக்
காண்பவன் பாக்கிய வானே.

இவ்விதமே,யான் எவர்கணில்உறுதும் எவர் அறியாதுமே வாழ்க.
இவ்விதமே,என் பிரிவினை எண்ணி எவரும் இரங்கி அழாதே
இவ்வுயிர் நீத்திந் நிலவுலகத்தி லிருந்துயான் மறைந்சென் றிடுக,
எவ்வகைக் கல்நாட் டெனும்என துடல்கொள் இடத்தினைஉணர்த்திடாதாக

ம. கோபாலகிருஷ்ணன்.

விடுகதை வினா.

ஓரா றெழுத்தொரு நூல்: ஒன்றிரண்டும் மூன்றாகும்.
போரார்பின் நான்குஞ்சொல்: பின்மூன்றும்— பாராகும்
முற்றும்இரண்டும்நீர். மூன்றுவ தேவல். இதென்?
கொற்றநச்சி னார்க்கினிய கூறு.

சே. ரா, கணபதிசுப்பிரமணிய ஐயர்
தமிழ்ப் பண்டிதர், பிச்சாண்டான் பாளையம்.

ODE ON SOLITUDE.

Happy the man, whose wish and care
A few paternal acres bound,
Content to breathe his native air,
In his own ground.
Whose herds with milk, whose fields with bread
Whose flocks supply him with attire,
Whose trees in summer yield him shade,
In winter fire.

Blessed, who can unconcern'dly find
Hours, days, and years slide soft away,
In health of body, peace of mind,
Quiet by day.
Sound sleep by night; Study and ease,
To-gether mixed; Sweet recreation;
And Inncсence, which most does please
With meditation.

Thus let me live, unseen, unknown,
Thus unlamented let me die,
Steal from the world, and not . stone
Tell where I lie.

—A .EXANDER POPE

சித்திரை ஸ்ரீ விடுகதை வினவுக்கு விடை.

தூங்க சிவகாமி சுந்தரியம் மாள்விடுத்த
பங்கமில்கேள் விக்குப் பகரும்விடை—கொங்கவிழும்
தேனுட்சி செய்கொன்றைச் சென்னியா ருக்குகந்த
'மீனுட்சி' என்ன விளம்பு.

G. P. சீத்தமூர்த்தி.

எமீட்சி யுறஉழைக்கும் அந்தணர்ப்பேர்த் திங்கள்வெளி யீடே! நீயே
'மீ''மீட்சி' 'மீன்' 'ஆட்சி' எனத்தனியே விளங்குபெருள் மேவும் வண்ணம்
ஆ'மீனுட் சி'ச்சொல்லே அமைந்தவிடை ஆகுமென அறிவால் மிக்க
பூமிதிற் பண்டிதையாம் சிவகாமி சுந்தரிக்குப் புகலு வாயே.

A. R ஸ்ரீனிவாச முதலியார்
ஆரணி மலை.

UNIVERSAL PRAYER.

*ஸர்வ ஜன ஜபம் என்னும் அனைவரும் வேண்டல்.

[*இது, சம்பத்து ராய் சயினரின் "எதிரிடைகள் இசைவுறுதல்" ('Confluence of Opposites' by Champat Rai Jain) என்னும் நூலின் இறுதிப் பகுதியை அடிப்படையாகக்கொண்டு வேண்டிய வேறுபாடுகளுடன் இயற்றப்பட்டது. (All Rights Reseeved by the Author.)]

எவ்வெவ் நாட்டினர், எவ்வெவ் வினத்தினர்,
எவ்வெம் †மதத்தின ரெனினும், ஆண் பெண்ணெனும்
இருபா லினர்க்கும் ஏற்ற பிரார்த்தனை:
நன்மையை நினைவார் நவில்வார் புரிவார்
நன்மையின் பயனை நண்ணச் செய்வதும்
தீமையை உன்னுவார் செப்புவார் செய்வார்
தீமையின் பயனுறச் செய்வதும் எதுவோ,
[1]அதனை அகத்துள் அகலா தமைத்தே,
எண்ணுதல் இயம்புதல் இயற்றுத லென்னும்
முச்செயல் களினும் முயல்வே னாக. (எ)

பசுக்கொலை செய்தப் பசுத்தோ லாற்செய்
செருப்பைத் தானம் செய்தல் போலத்,
தீய எவ் வகையினும் தேடிய பொருளாற்
செய்யும் எத் தன்மமும் திண்ணமா அதன்மமே:

---

†உண்மையி னும்உயர் ஒருமத மும் இலை.
அனைத்துண் மையினுக் களவிலை. ஆகலால்
உண்மை அனைத்தும் உடைய மதம் இலை.
உண்மை ஒன்றும் உறுமத மும்இலை
எம்மதம் எவ்வள வுண்மையொ டியையுமோ,
அம்மதம்* அவ்வள வுயர்வின தாமே.
மெய்யர் இவர், பொய் வேடத் தினர் இவர்,
என்ன, ஐயுற வின்றி அறியுமா,
றுள்ளத் துள்ளதை உணரவல் லார்க்கலால்,
மற்றவர் உண்மை மதம் அறி வரிதால்;
மனிதனை மதத்தால் மதியா(து) ஒழுக்கால்
மதித்தலே உண்மை மதிப்பா குமமே.
(ஒழுக்கு - ஒழுக்கம்)

அதனால்,

[1]அறமுறை [2]திறம்பி அறம்செயே னாக;
அறநெறி [3]வழீஇப் பொருள் ஆக்கே னாக;
அறவழி யன்றி இன் படையே னாக.

என்றும்,

நல்லோர் இணக்கமே நான் இணங் கிடுக;
நல்லோர் நினைவே நான் நினைந் திடுக;
நல்லோர் நடையே நான் நடந் திடுக;
பிறர்நல்முறைகளைப் பேணி என் முறைகளா
ஆக்குதற் காசை அடைவே னாக: (௧௪௫)
உயிர்களை வருத்தல் ஒழிவே னாக;
உயிர்போ மெனினும் மெய் உரைப்பே னாக;
களவினைக் கனவினும் கருதே னாக;
சூதா டெண்ணமும் [4]துறப்பே னாக;
மதியினை மயக்கிடும் மதமுத லியவை
எதனையும் உட்கொளும் இழுக்கிலே னாக;
வாழ்க்கைத் துணைபா லன்றிமற் றவர்பாற்
காதல் உறுதல் [5]கடிவே னாக;
உயிரினும் மானம் [6]ஓம்புவே னாக;
இறப்பே னாயினும் இரவே னாக;
அயலவர் பொருளினை [7]அவாவே னாக;
அவர்கள்தம் வாழ்வுகண் [8]டழுக்கறே னாக;
அவர் செயும் நன்றியை [9]அயர்த்திடே னாக;
முன்பு பின் பவர்பழி மொழியே னாக;
எங்கணும் அவர் புகழ் இயம்புவே னாக.
அவர்குறை காண்டலிற் குருடனே னாக;
அவர்[10]மறை கேட்டலிற் செவிடனே னாக;
அவர்க்[11]கின்னா கூறலில் ஊமனே னாக;

[1] பிரகிருதியென்னும், இயற்கை, நியதி, ஊழ், தருமசக்கரம், கடவுள் முதலியபொருள்களுள் அவரவர்கொள்கைக்கியைந்தபொருளைக்குறித்தது. [2] தவறி, [3] வழுவி-தவறி, [4] வெறுத்துவிடுவேன், [5] நீக்குவேன், [6] பாது காப்பேன், [7] விரும்பேன். [8] பொறாமை அடையேன், [9] மறவேன், [10] இரகசியம் [11](அடித்தல் உதைத்தல் முதலிய) துன்பம் தருவன.

அவர்க் [1] கூறு செய்தலின் முடவனே னுக;
அவர்கேடு சூழ்தலில் அறிவிலே னுக;
எனைக்கெடுத் தவர்க்கும்நன் றியற்றுவே னுக;
வைதவர் தம்மையும் வாழ்த்துவே னுக;
வெறுத்தவ ரெவரையும் விரும்புவே னுக;
[2] ஒறுத்தவ ருக்கும் உதவுவே னுக;
பகைவர்க்கும் அன்புசெய் பண்பினே னுக;
இத்தனை நல்லொழுக் கியைந்துளே னென்று
பெருமை பா ராட்டிடும் பிழையிலே னுக: (சக)
வாழ்வு வரின் இறு மாந்திடே னுக;
தாழ்வுறு மெனின் மனந் தளர்ந்திடே னுக;
செய்தற் குரிய சிறிய கடனையும்,
எய்தற் குரிய பயனை எண் ணுமல்,
அப்பயன் அடைந்திட அவாவுவா ரரினும்
விருப்போடு செய்திடும் [3] விழுமியே னுக: (ம்

(இன்னும் வரும்)

ராவ்ஸாகிப்: வெ. ப. சுப்பிரமணிய முதலியார்,
வெள்ளகால்.

பத்திராதிபர் அறிவிப்பு.

இந்தமாதம் 'கமத்தொழில் விளக்கம்', 'தேசோபகாரி', 'கிருஷிகன்', என்பவைகளை மாற்றுப் பத்திரிகைகளாக அனுப்பிய நம்சகோதரர்களுக்கு நன்றி கூறுகிறோம்,

விடுவிப்பு வினுப் பரிசுகளின் முடிவு அடுத்த சஞ்சிகையில் அறிவிக்கப்படும்.

சந்தாதாரர்களாயினும் அபிமானிகளாயினும் நமக்கு விடுக்கும் வீணுரைக் கடிதங்களுக்குப் பதில் விடுக்க எமக்குப் அவகாசமும் பொறுமையுமில்லை. ரிப்ளைகார்டு, ஸ்டாம்பு முதலியன அனுப்பினுலும் வீண் சிரமத்திற்குள்ளாக எமக்கு இஷ்டமில்லை என்பதை யாவர்க்கும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

[1] திங்குகள் [2] வருத்தம் செய்தவர், [3] சிறப்புடையேன்.

திருமுருகாற்றுப்படை.

(94 ஆம் பக்கத் தொடர்ச்சி.)

சேயாக விளங்கும் பால சுப்பிரமணியக்கடவுள் சிவந்த வேலை யேந்தியவர். யாவராலும் உணர்தற்கு அரிதாகவுள்ள கீர்த்தியை யுடையவர். அவ்வெற்றிக்குக் காரணமாவது: சூரன் பதுமன் என்னும் இரண்டு பெயர்களோடு விளங்கும் ஒரு பெரிய சரீரத்தோடு திகழ்ந்த அசுரன் ஒருவன் இருந்தான் அவன் கடலில் மாமரமாக மாறியிருந்தான். அதன் பூங்கொத்து மேல்நோக்காமல் கீழ்நோக்கி யிருந்தது. அங்ஙனமிருந்தது அசுரர்களது நல்வெற்றி குன்றுவதைக் குறித்துக் கொண்டிருந்தது அம்மாமர வடிவுகொண்டிருந்த அசுரனது ஆகம் சிதைந்து வேறாகும்படி, யாவருக்கும் பயமுண்டாகும் வகையில் முருகக்கடவுள் அம் மாவினை நெருங்கினர். நெருங்கினதோடு அமையாது, சூரர் கோமானைக் கொன்ற வேலினால் அம் மரத்தை வெட்டி வீழ்த்தினர். அவ்வேல் இலைவடிவாக அமைக்கப்பெற்றிருக்கும். அவ் இலைதானும் எரிகின்ற இலைபோன்றிருக்கும். அங்ஙனம் வெட்டுவதற்கு வேல் சென்றகாலத்தில் நிலத்தில் மிக்க குளிர்ச்சியையுடைய கடலானது தன்னிலையிற் குலைந்தது. இவ்வாறு நிகழ்ந்தபோது பேய் கூத்தாடா நிற்கும். அப்பேயின் தலையிலுள்ள உரோமம் உலர்ந்துகிடக்கும். அதனுடைய பல் பிறழ்ந்து கிடக்கும். அஃதாவது ஒரு பல் நீண்டும், மற்றொன்று குறுகியும், ஒன்று முன்வந்தும் மற்றொன்று பின்சாய்ந்துமிருக்கும். அதன் வாய் அங்காந்திருக்கும். கண்கள் கோபத்தாற் சுழன்றுகொண்டிருக்கும். கண்கள் பசுமையாக இருக்கும். பார்வையோ கொடிதாக இருக்கும். அதன் காதுகளில் பிதுங்கிய கண்களையுடைய கூகையும், கொடும்பாம்பும் தொங்கிக் கொண்டிருக்கும். அக் காதுகள் மார்பில் வந்து மோதி வருத்தும். அதனுடைய பெரிய வயிறு வழவழப்பாயிராது சரசரப்பாயிருக்கும். அதன் நடை கோபத்தைக்காட்டும். பார்ப்பவர்களுக்குப் பயத்தை விளைவிக்கும். பேய் மகளின் கொடியவிரலின் நகம், இரத்தத்தை யளைந்திருக்கும். இவ்விரலினாலே கண்களைத்தோண்டி உண்ணப்பட்ட மிகுந்த நாற்றத்தையுடைய கறுத்த தலையைக்கையிலே எடுத்துக் கொண்டிருக்கும் அக்கையில் ஒள்ளிய வளையல்கள் உண்டு. தலையைக் கையிலெடுத்து அசுரர்கள் பயப்படும்படி தப்பாது எதிர் நின்று கொல்லுகின்ற வெற்றியையுடைய போர்க்களத்தைப் பாடி, தோளை யசைத்துக்கொண்டு, பிணத்தைத் தின்றவாயினையுடையளாய் இரண்டு கைகளையும் முடக்கியாடுதலாகிய துணங்கைக்கூத்தாடுவள்.

அப்பெருமானது திருவடிகளைக் கருதும் சிறந்த மனதுடன் நற்செயலைப் பல பிறப்பினும் செய்தால் உண்மை ஞானமுண்டாகும்.

அவ்வுண்மை ஞானத்தைச் சாதித்து அவாது திருவடியில் தங்கும் நெறியை "நீ விரும்பினையானால், நீ முற்பிறப்பில் நினைத்துச்செய்த நல்வினையால் நற்குணங்கள் பலவும் சேரவுண்டாகும். நற்குணங்கள் உண்டானால் மனம் நன்றாகும். அந்த நல் மனதில் உண்டாகிய நல் இச்சையினாலே இப்போதே முத்தி வாய்க்கப் பெறுவாய்."

அவ்வாறு முத்தியைத் தரவல்ல முருகர் எழுந்தருளியிருக்கும் இடங்கள் பல. அவற்றுள் ஒன்று பின் குறிப்பிடப்படுவது. முருகப் பெருமானார் திருப்பரங்குன்றிலே விரும்பி வீற்றிருத்தலிலும் உரிமையுடையவர். அம்மலையிலையினருகில், வண்டின் கூட்டமானது ஆரவாரித்துக் கொண்டிருக்கும். அவ்வண்டுகளின் சிறகுகள் அழகாயிருக்கும். அவைகள் இராக்காலத்தில் தாமரைப் பூவில் உறங்கும். தாமரையின் தாள்களில் முள்ளடர்ந்திருக்கும். இத்தாமரைகள் கரிய சேற்றினையுடைய அழகிய கழனிகளிலே முளைத்திருக்கும். தாமரை மலர்களில் உறங்கிய வண்டுகள் வைகறையில் எழுந்து தேன் மணக்கும் நெய்தற்பூவில் ஊதும். பின்னர், சூரியன் தோன்றியபோது கண்போன்று மலர்ந்துள்ள சுனைப்பூக்களில் சென்று ஆரவாரஞ் செய்யும். இத்தகைய ஆரவாரத்திற்கு உரிய திருப்பரங்குன்றம் மதுரையின் மேற்குத்திக்கில் உள்ளது. அம்மதுரையில் இலக்குமி என்றும் நீங்காத குற்றமற்ற கடைவீதிகளும், மாடங்கள் நிறைந்த பிற வீதிகளும் உண்டு. போரின் பேச்சு என்பதே அந்நகரின் வாயிலில் கிடையாது. அவ்வாயிலின் அருகே ஆகாயமளவு உயர்ந்துள்ள கொடி ஒன்று கட்டப்பட்டிருக்கும். அக்கொடிக்கருகில் நூலால் வரிந்து அலங்கரிக்கப்பட்ட பந்தும் பாவையும் தொங்கிக்கொண்டிருக்கும்.

(இன்னும் வரும்)

மு. நடேச முதலியார்,
திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்.

எழுதுவதற்கும் அச்சிடுவதற்கும் வேண்டிய எல்லாவித மான காகிதம்; மை, பேனா, பென்சில் முதலியன

திருச்சிகோட்டை

ஜனானுகூல அச்சுக்கூடத்தில்

விலை சரசமாய்க் கிடைக்கும்.

விலைவிவரத்தை விசாரித்தறியுங்கள்.

மதிப்புரை.

அம்பாசமுத்திர நகர்த் தீர்த்தபதி உயர்தரக் கல்விச்சாலைத் தலைமைத் தமிழாசிரியர் ஆகிய பிரம்மஸ்ரீ ஹரிஹரஐயர் அவர்கள், இப்போது தாம் எழுதிப்பதிப்பித்த நான்கு நூல்களை எமது பார்வைக்கு அனுப்பியுள்ளார்கள். அவைகளாவன:—'பாண்டிய ராஜ வம்ச சரித்திரம்' முதலிரண்டு பகுதிகள். 'எம்மண்டலமுங் கொண்ட குலசேகர பாண்டியன் அல்லது 'தந்தாபஹரணம்', 'மகாவீர விஜயம்' என்ற நான்குமாம். ஐயரவர்கள் புலமைத்திறமும் வாக்கு நயமும் பிற அருமை பெருமைகளும் முன்னர் இவர்கள் இயற்றியுள்ள அம்பைத் தலபுராணம் முதலிய நூற்களைப் பார்த்தோர்க்குப் புலனாம் என்பதில் ஐயமின்று. ஐயரவர்கள் செய்யுள் நூல்கள் உரை நூற்கள் இயற்றுவதிற் றேர்ந்தோராதலன்றி இந்நாட்டு கல்விச் சிறப்புக்கிசைந்த சரித்திர ஆராய்ச்சித் திறனிலுஞ்சான்றோரெனற்கு இவர்கள் இப்போது வெளியிட்டுள்ள பாண்டிய ராஜ வம்ச சரித்திர நூற்களே சான்றாம். பாண்டிய ராஜ பரம்பரைச் சரித்திரத்தைத் தெளிவுற அறிந்து கோடலிற் பெரிதும் முட்டுப்பாடுகளுளவென்று அறிஞர்கள் திண்ணிதின் உணர்வாராயினும், அவற்றாற்றாம் சிறிதும் சலியாது நூற்களையும் சில சாசனங்களையும் முற்ற ஆய்ந்து வரலாறுகளை இடர்ப்பாடின்றி இணக்குமாறிணக்கிக் கற்போருள்ளஞ் சலியா வண்ணம் படிக்குந்தோறும் இன்பம் ஊறிச்செல்லும்படி தெளிவாய் எழுதி அளித்துள்ளார்கள். பண்டைத் தண்டமிழ் நூற்களை ஆயுந்தோறும், அவற்றிற் குறிப்பித்த பண்டைத்தமிழ் மன்னருட் சிறந்தோராகிய பாண்டிய மன்னர்களுள் முன்னோரும் பின்னோரும், எவ்வெக்காலத்தினர், எவ்வெவ்வாற்றாற் சிறந்தோரென அறிந்து கோடற்கு, பண்டை நூற்களேயன்றிச் சாசனங்களும் பெருந்துணையாவனவாம். சாசனத்தாலாதரிக்கப்பட்ட செய்திகளே பெரிதும் உறுதிப்பாடுடையனவென்று சரித்திராசிரியர் கருதுவது உலகறியும். இச் சாசன ஆராய்ச்சிச் செய்திகள் ஆங்கிலங் கற்றோரே அன்றித் தமிழொன்றே கற்றோரறிதற்கியலாதனவாம்படி ஆங்கிலத்தின்கண்ணே அவை வெளிப்படுவன. இதனால் தமிழ் நாட்டுச் சரித்திரங்களைத் தமிழ் மக்கள் நன்குணர்ந்துகொள்ளுமாறில்லை. இக் குறையைநம் ஐயரவர்கள் நீக்கினர். முன்னர் ஸ்ரீ. அ. கோபிநாதராயரவர்கள் பிற்றைநாட் சோழமன்னர் சரித்திரத்தைச் சாசனச் செய்திகள் நூற்செய்திகளிவற்றானியைபுபடுத்து, ஒரு நூலில் வெளிப்படுத்தித் தமிழ் நாட்டினைக் கடப்படுத்தினர். இப்போது ஐயரவர்கள் பாண்டிய ராஜ பரம்பரிய சரித்திரத்தைச் செவ்வனே ஆய்ந்து, முப்பகுதிப்படுத்து, மூன்று நூற்களாக வெளிப்படுப்பாராயினர். முன்னாட் பாண்டியர் செய்திகளைப் புறநானூறு முதலிய சங்க நூற்பாட்டுக்களைக்கொண்டும், பின்னாட் பாண்டியர் சரிதங்களைச் சாசன

ஆராய்ச்சி கொண்டும் விளக்கி இருக்கின்றனர். சரித்திரங்களையறிய இந்நாட் கல்வியுடையார் பெரிதும் அவாவுதற்கியைய, ஐயரவர்கள் இப்பணியை மேற்கொண்டு செய்து முடித்தமை கருதி மிக மகிழ்வுறுகின்றோம், இந் நன்முயற்சியில் தூண்டிப்பொருளளித்த பெருந்தகையார் வண்மையையும் பெரிதும் பாராட்டுகின்றோம்.

இம் முப்பகுதி நூற்களன்றி 'எம்மண்டலமுங்கொண்ட குலசேகர பாண்டியன் அல்லது தந்நாபஹாரணம்' என்னுந் தனிச் சரித நூலொன்று, முற்பாண்டியர்களுள் ஒருவன் சரிதத்தை வேறு பிரித்து விளங்கக் கூறுவது. இது பல கற்பனைகளோடு சரித நிகழ்ச்சிகளைத் தெளிய விரித்துரைப்பது. இதில் அக்கால வழக்குகளும் அரசர் மக்களிவர்கள் மனப்பான்மையும், பிறவும் தெளியக்கிடக்கின்றன. தண்டமிழ் இனிமை ததும்பி நிற்பது.

இனி 'மஹாவீரவிஜயம்' என்ற சிறுநூல், ஜைனசமய ஸ்தாபகராய மஹாவீரரது ஜீவியசரித நூலாகும். இதுவும் பலகற்பனைநயங்களோடு பெரியாரியல்புகளை நன்குணர்த்தும் நோக்கத்தோடு எழுதப்பட்டதாதலின், இதனை அறிஞர்கள் கற்றுணரல்வேண்டும். சமயாசாரியர் சரிதங்களைப்போற்றிப் படிப்போர் தமிழ் மக்களன்றோ? இதுகாறும் ஜைந சமய ஸ்தாபகர் சரிதம் நூலளவில் வெளிப்போந்ததின்றாதலின் இதனைப் பெற்றுப் படித்தல் நலம். இவை யாவுமே நான்காவது ஐந்தாவது பாரங்களுக்கு உப-பாடமாக வைக்கக்கூடியவைகள். இவற்றின் விலை வருமாறு:—பாண்டிய ராஜ வம்ச சரித்திரம் முதற் பகுதி 0—10—0. ஷை இரண்டாம் பகுதி 0—10—0. குலசேகர பாண்டியன் அல்லது தந்தாபஹாரணம். 0—12—0 மஹாவீர விஜயம் 0—5—0. வேண்டுவோர், ஆக்கியோர்க்கெழுதிப்பெறுக.

கம்மபாலன்:—கம்மவார் ஜாதியாரின் முன்னேற்றத்திற்காக உழைக்கத் தோன்றிய மாதாந்தப் பத்திரிகை. இது ஸ்ரீமான் R. வெங்கடசாமி நாயுடுகாரு அவர்களைப் பத்திராதிபராகக்கொண்டு (சாத்தூர் மார்க்கம்) திருத்தங்கலிலிருந்து மாதந்தோறும் வெளிவருவது. பிற ஜாதித்துவேஷம் பிற மதத்துவேஷமின்றிக் கம்மவார் ஜாதியாரின், ஒற்றுமை, முன்னேற்றம், கல்வி, முதலியவைகளை விருத்திசெய்யப் பலவிததிலும்பாடுபடுவது. கோவில்பட்டி தக்ஷிண கம்ம மகாஜன சங்கத்தாரின் ஆதரவில் நடைபெற்று வருவது. இதன் வருட சந்தா ஒரே ரூபாய்தான். இக் குறைந்த சந்தாவே இப்பத்திரிகை கம்மவார் ஜாதியார் மட்டும் அன்றி ஏனையவரும் இதன் சந்தாதாரர்களாவரென்றும் இதற்கென்று ஒரு சொந்த அச்சுக்கூடம் விரைவில் ஏற்படும் என்றும் எதிர்பார்க்கக் இடந்தருகிறது. கேவலம் பொருள் வருவாய் கருதியே நடத்தப்படாமல் பொது நலம் கருதியே நடத்தப்படும் உண்மையை விளக்கத்தக்க நிலையில் உள்ள இப்பத்திரிகை நீடுவாழ்க.

கிருஷிகன்:—சைதாப்பேட்டையிலிருந்து வெளியாகும் இந்த விவசாயப் பத்திரிகையின் 9 ஆம் தொகுதியின் முதற் பகுதியைப் பெற்றோம். 1914 வருஷம் மார்ச்சுமீ நிறுத்தப்பட்ட இப்பத்திரிகை மறுபடியும் தோன்றியது நம் நாட்டார் செய்த நற்பயனேயாம். எழுதப்படிக்கத் தெரிந்த ஒவ்வொரு கிருஷிகன் கையிலும் இப்பத்திரிகை இருத்தலால் மிக்க நலம் விளையுமென எமக்குத் தோன்றுகிறது. நல்ல பளபளப்பான காகிதத்தில் 32 பக்கங்களுக்குக் குறையாமல் தபாற்கூலியுள்பட ஒரேருபாய் சந்தாவில் இதன் பத்திராதிபர் ஆகிய ஸ்ரீமான் J. R. ரெங்கராஜு அவர்கள் நடத்த முன்வந்து நிற்பது, நம்நாட்டின் க்ஷேமத்தைக் கருதி அவர் பாடுபட்டுவரும் உண்மையை விளக்கும். கிருஷிகத் தொழிலுக்குத் தக்க அனுபவமும் அறிவும் திறமையும் வாய்ந்த பலர், ஆசிரியருக்கு உதவியாய் நின்று பத்திரிகையை நடத்த ஒத்துக்கொண்டு இருப்பதாலும், இப்பத்திரிகைக்கு என்று ஒரு சொந்த அச்சுக்கூடம் இருப்பதாலும், இப்பத்திரிகை நடத்துவோர் தேசக்ஷேமத்திலேயே கவலையும் கருத்தும் கொண்டிருப்பதாலும், அவர்கள் எதிர்பார்க்கிறபடி பத்தாயிரம் சந்தாதார்கள் அல்ல, பத்து பத்தாயிரம் சந்தாதார்கள் சேர்ந்து ஆதரித்தாலும் அது எமக்கு வியப்புக்கு இடம் தராது. இப்பத்திரிகைக்கும் பத்திராதிபருக்கும் பல்லாண்டு கூறுகிறோம்.—பத்திராதிபர்

சமாசாரக்கொத்து.

கோலாப்பூர் மகா ராஜாவின் காரியதரிசியான ஜாமினி தாஸுக்கும், எகிப்து தேசத்தின் மாஜி மந்திரியான இசத் பாத்ஷாவின் மகளுக்கும், பாரிஸ் நகரத்தில் சமீபத்தில் கல்யாணம் நடந்தேறியது.

சென்னைத் திருமயிலையில் அதிபத்தநாயனார்கழகம் ஏற்பட்ட பின்னர், அங்குள்ள நாயனாரின் சந்ததியாரான செம்படவர்கள் எல்லோரும் சிவராத்திரியன்று வலை வீசுவதே இல்லையாம்.

ஜெர்மனியின் தலைநகரான பெர்லினில் ஜோசி என்பவர் பந்தயம் போட்டுக்கொண்டு நாற்பத்தெட்டு நாள் உண்ணாவிரதமிருந்து ஐந்நூறு ஆயிரம் பவுன் வெகுமதி பெற்றார். இதில் ஆயிரம் பவுன், அதிகாரிகள் வருமான வரியாக வசூலித்துக் கொண்டு விட்டார்களாம்.

தமிழும் ஆங்கிலமும் சம்ஸ்தான பாஷையாக இருக்கவேண்டுமெனப் புதுக்கோட்டை சட்டசபையில் ஒரு தீர்மானம் நிறைவேறி இருக்கிறதை அறிந்து சந்தோஷிக்கிறோம்.

இங்கிலாந்தில் நடப்பதுபோல இந்தியாவிலும் ஒவ்வொரு தபால் முத்திரையிலும் நாட்டுத் தொழில்களை ஆதரிக்குமாறு அச்சிடுவதாக இந்தியத் தபால் இலாகா அதிகாரி ஒத்துக்கொண்டிருப்பதாக அறிகிறோம்,

—பத்திராதிபர்.

இனம்! இனம்!! இனம்!!!

ஒரு ரூபாய் அல்லது 1ரூ-4அணா விலையுள்ள எமது பிரசுரங்கள்.

குறுக்கு வார்த்தை பந்தனம்.

■	1	2	3	4		■
5	■	6			■	7
8	9	■		■	10	
11						
12		■		■	13	
	■	14		15	■	
■	16					■

இடமிருந்து வலம்.

1 ஒரு ராக்ஷஸன்
6 வயிறு
8 ஒரு வருஷம்
10 உண்மை
11 ஒரு புஸ்தகம்
12 ஒரு அளவு
13 நிலை (மாற்றி வாசிக்க)
14 மூன்று
16 காரியங்கள்

மேலிருந்து கீழ்.

2 குற்றம்
3 ஒரு புத்தி
4 மன்மதன் தேவி
5 ஈகையாளன்
7 விருந்தினர்கள்
9 வருத்தம்
10 உத்தமகுணம்
14 சபை
15 மோட்சம் (மாற்றி வாசிக்க)

மகா-ள-ள-ஸ்ரீ "நச்சினார்க்கினியன்" பத்திராதிபர் அவர்களுக்கு

ஐயா,

விடையில் தங்கள் தீர்ப்பே முடிவானதென்றும் சட்ட சம்பந்தமாய்ச் சொல்லத்தக்கதென்றும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

பெயர்______________________

விலாசம்______________________

தேதி______________________

☞ விடைகள் வைகாசி-மீ 20-உக்குள் கிடைக்கவேண்டும்.